egistered No. M. 2330

'SIDDHANTHAM'
Vol. 29—No. 9

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'நன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 29 | துன்முகி புரட்டாசி 1956 செப்டம்பர் | இதழ் 9

உள்ளுறை — பக்கம்

பத்திராசிரியர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
2, சீதாராம நகர், கடலூர் N. T.

ஆண்டுச் சந்தா ரூபா 3 — தனிப்பிரதி அணா 4

பிரிவாற்றுமை

நமது சமாஜத்தோடு நெருங்கிய தொடர்புடையவரும், ஆலங்குடி திருக்கொள்ளம்பூதூர் கும்பாபிஷேக சமாஜ மாநாடுகளை 1930, 1937-ம் ஆண்டுகளில் ஏற்பாடு செய்தவரும், 1945-ல் மகாமகத்தில் கும்பகோணத்தில் சமாஜ மாநாட்டை ஏற்பாடு செய்தவரும், சிவபூஜையில் மிக்க ஈடுபாடுடையவரும், தஞ்சை மாவட்டக் கல்விநிலையங்கள் பலவற்றில் தலைமை ஆசிரியராயிருந்தவரும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திருக்குறளாராய்ச்சிப் புலவராயிருந்தவருமாகிய சைவத் திருவாளர் – சாமி – **வேலாயுதம் பிள்ளையவர்கள்** 16–8–56 காலையில் சிவபதமடைந்த செய்தியை மிக்க வருத்தத்தோடு தெரிவித்து அவர் மனைவி மக்கள் உறவினர்கட்குச் சமாஜத்தின் அநுதாபத்தை யறிவிக்கிறோம்.

Regd. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு

மலர் 29	துன்முகி புரட்டாசி 1956 செப்டம்பர்	இதழ் 9

சமயக் கல்வி

ஆசிரியர்

பண்டைக்காலத்தில் நமது நாட்டுக் கல்வி சமயக் கல்வியாக இருந்தது. அதனை அடிப்படையாகக் கொண்டு தான் மற்ற உலகியற் கல்வியைப் புகட்டினார்கள். வடநாட்டில் முனிவர்கள் ஆசிரமங்களில் இருந்துகொண்டு அவர்களை அண்டிவந்த மாணவர்களுக்குச் சமயமும் ஒழுக்கமும் போதித்து வந்தார்கள். அந்த ஆசிரமங்களுக்குச் சாதாரண மக்களேயன்றி அரச குமாரர்களும் சென்று கல்வி கற்று வந்தார்கள். இந்த முறைக்கு இதிகாசங்களும் புராணங்களுமே அத்தாட்சியாகும். அரசாங்கத்தார்கள் தனியாகக் கல்விச் சாலையை வைத்து நடத்திவந்ததாகத் தெரியவில்லை.

தென்னாட்டிலே நடந்துவந்த கல்விமுறை சிறிது மாறுபட்டிருந்தது. ஊர்களில் இருந்துகொண்டே ஆசிரியர்களிடம் மாணவர்கள் கல்வி கற்றுவந்தார்கள். ஓர் ஆசிரியன் எழுத்து முதல்கொண்டு தொல்காப்பியம் வரையில் மாணவனுக்குக் கற்றுக் கொடுப்பான். மாணவன் தன் விருப்பத்திற் கேற்கவும் ஓழிவுக்கு ஏற்கவும் ஓர் அளவு கொண்ட படிப்பைப் படிப்பான். சிலர் உலகியல் தொழிலுக்கு ஏற்ற துறைக்கும் சிலர் மேன்மைகொண்ட சமயத் துறைக்கும் படிப்பார்கள். இந்த முறையில் தொழிலாளர்களும் கூடச் செய்யுள் இயற்றிப் புகழ்பெறும் மட்டில் வகுப்பு வாதம் இன்றிப் படித்தார்கள். இந்த நிலைக்குச் சங்கத்தார் காலத்துப் புலவர்களில் அரசர்கள், அந்தணர்கள்,

வணிகர்கள், தொழிலாளர்கள் முதலியோர் மட்டுமன்றிப் பெண்பாலார்கள், விறலியர், கூத்தர், பாணர் முதலியோரும் படித்து வந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும் கற்றுக் கொண்ட கல்வியின் நோக்கம் என்ன என்று சற்று நினைப்பூட்டுவோம்.

அக்காலத்தில் எந்தப் படிப்பைப் படித்தாலும் கடவுளை முன்னிட்டே படிப்பு தொடங்கப்பட்டது. கடவுள் வணக்கம் இல்லாத படிப்பே இல்லை. நூல் எழுதுவோனும் கடவுள் வணக்கம் கூறியே எழுதுவான். இந்த வகையில் சாதாரணப் படிப்பும் இருந்தது. படிப்பு முற்றும் காலத்திலும் சமயப் படிப்பிலேயே முற்றிவரும். இந்த முறையை நன்கு விரித்த திருவள்ளுவர்,

“ கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் ”

என்றார். ஆகவே படிப்பினுடைய இறுதி நோக்கம் அல்லது குறிக்கோள் கடவுள் தொழுகை ஆகும். இது எல்லா மக்களுக்கும் ஒப்ப முடிந்தது எனல்வேண்டும்.

இயல் இசை நாடகம் என்ற மூவகைத் தமிழ்ப் படிப்பில் இந்த முறையே ஆதியிலும் அந்தத்திலும் இருந்தது. இயல் எட்டுப் படிப்பாக இருந்தது. ஆகவே அதில் கடவுள் வணக்கம் எளிதாக அமையும். இசைத் தமிழிலே இசைக் கருவிகள் சிறப்பாக ஈடுபடும். ஆகவே கடவுளும் சமயமும் இங்கே எப்படிக் காணமுடியும்? இசைக் கருவிகள் துளைக் கருவி, தோல் கருவி, கஞ்சக் கருவி, நரம்புக் கருவி, மிடற்றுக் கருவி என ஐந்து வகைப்படும். இக்கருவிகள் கடவுள் வணக்கம் செய்யமாட்டா. ஆனால் இவைகளை இயக்கும் மக்கள் கடவுள் வணக்கம் செய்யமுடியும். தமிழ் நாட்டில் எந்த இசையாளனும் கடவுள் வணக்கமின்றி இசைக்க மாட்டான். அதுபோலவே நாடகக் கலையிலும் எந்த நாடகத்திலும் கடவுளைமுன்னிட்டுத் துதிசெய்துவிட்டே நடிகன் தொடங்குவான். ஆகவே முத்தமிழிலும் கடவுள் வணக்கம் இருந்தது. மேலும் அவற்றின் நோக்கமும் அதிலேயே முற்றுப்பெற்றது எனலாம். இயற்றமிழ் கடவுள் அடியைக் குறிக்கோளாகக் கொண்டு இயங்க, இசைத் தமிழும் நாடகத் தமிழும் அவ்வாறே இலங்கின என்பதற்குச் சமய வர

லாறுகள் பல எடுத்துக் காட்டுகின்றன. ஆனாய நாயனார் இசையை வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டு ஐந் தெழுத்தைக் குழலில் இசைத்துக்கொண்டே இறைவன் திரு வடி அடைந்ததும், திருநீலகண்ட யாழ்ப்பாணரும் திருப் பாண் ஆழ்வாரும் இறைவன் திருவடியை அவ்வாறே அடைந்ததும் சமய வரலாறுகளில் காண்கிறோம். இந்த முறையில் முத்தமிழ்களுக்கும் குறிக்கோள் இறைவனடி என்பது தமிழர் மரபு.

இனி, தமிழில் முத்தமிழ் என் பிரிவினையேயன்றி, ஏனைய கலைகளும் முன்னாளில் பயிலப்பட்டன. சிறப்பாக, கட்டிடக் கலை அல்லது சிற்பம், கல்வேலை, பொன்வேலை, மண்வேலை என்ற உருவ அமைப்பு, இயல், சோதிடம் என்ற கணித நூல், மருத்துவம் என்ற உடல் அறி நூல், மந்திர நூல் முதலியவைகளும் பயிலப்பட்டன. கட்டிட வேலையின் முற்றிய நிலையைக் கோயில் அமைப்பில் காண லாம். உருவ அமைப்பின் முற்றிய நிலையாக, திருவுருவ அமைதிச் சிறப்பாக,நடராசர் திருவுருவம்,திகழ்ந்து நிற்கும். கணித நூலில் மக்கள் பின்காலத்திய நிலை, மருத்துவத்தில் காயசித்தியடையும் நிலை முதலிய நிலைகள் தமிழரின் குறிக் கோளை உணர்த்துவனவாகும். உணவுக்கு வேண்டிய பல வகைத் தொழில்களாகிய உழவு, நெசவு, பலவகைக் கைத் தொழில்கள் இவைகளிலும், தொடக்கத்திலும் இறுதியிலும் கடவுள் வணக்கமின்றி எதையும் தமிழ் மக்கள் செய்ய மாட்டார்கள்.

இவ்வாறு தமிழ் மக்களுடைய பண்பு, தொழில், பயிற்சி முதலியவைகள் எல்லாம் சமயத் துறையிலேயே தொடங்கிச் சமயத்துறையிலேயே முடிவு அடைய, இந்நா ளில் நமது அரசியல் இந்த முறையை எவ்வாறு மாற்றியிருக் கிறது என்று சிறிது ஆராய்வோம்.

நமது நாட்டு அரசியல் சமயப்பற்றற்றது என்று அடிப்படையிலேயே வரையறுத்து விட்டார்கள். அவ்வரை யறையை ஒட்டிக் கல்வித்துறையிலும் சமயச் சார்பு கூடா தென்று கூறிவருகிறார்கள். இந்த வகையில் நமது கல்விச் சாலைகளில் சமயப்படிப்பு அடியோடு அகற்றப்பட்டது. சமயப் படிப்பு இல்லாத வகையில் பொதுப் பள்ளிகளில் மாணவர்கள் வெறும் உலகியற் படிப்பில் தேர்ச்சிபெற்றுச்

சமயத்தை வெறுக்கவும் தொடங்குகிறார்கள். இந்த நோக்கத்திற்குச் சாதகமாகச் சில இயக்கங்கள் நாட்டில் தோன்றி இளைஞர்களை உணர்ச்சியற்ற பிண்டங்கள் ஆக்கிவிடுகின்றன. உடல் மட்டும் வளர்க்கும் விலங்கினங்களுக்கு ஒப்பானவர்கள் ஆக்கிவிடுகிறார்கள். இந்த நோக்கத்தில் நாடு செல்லுகிறது.

இந்த மாதம் 25, 26, 27-தேதிகளில் வித்தியாலயத்தில் கல்வி மாநாடு கூடிற்று. அதில் கல்வியை எவ்வகையில் சிறப்படையச் செய்வது என்று ஆராயப்பட்டது. அதில் தென் நாட்டுச் சிறந்த கல்வி அதிகாரிகள் கலந்துகொண்டு பேசினார்கள். எழு பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களும், 5 அரசியல் கல்வி யமைச்சர்களும், மத்திய அரசியல் அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள். ஆதாரக் கல்வி, நடுநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி இவைகள் எல்லாம் தர்க்கிக்கப்பட்டன. எல்லாவற்றிலும் கற்றுக்கொடுக்கும் மொழி, எத்தனை ஆண்டுகள், என்ன தொழில்கள், என்ன கலைகள், இடவசதி, உணவு வசதி, செலவுத் திட்டம் இவைகளைப்பற்றி யெல்லாம் பேசிச் சலித்துப்போனார்கள். ஆனால் மாணவர்களின் ஒழுக்கம், ஆன்மப் பயிற்சி, பண்பாட்டின் சீர்மை, சமயமேம்பாடு இவைகளைப்பற்றி ஒரு சிறிதும் ஒருவரும்பேசவில்லை; தீர்மானிக்கவும் இல்லை. மூன்று நாட்கள் கணக்கற்ற செய்திகளைப்பற்றிப் பேசினபோதிலும் ஆன்மீக மேன்மையைப்பற்றி ஒரு பேச்சும் இல்லை. திருக்குறளை முற்றும் மறந்தார்கள். இந்த முறையில் விலையுயர்ந்த நேரம் வீணாக விரயம் ஆயிற்று. முடிவில் ஒரு அங்குலம்கூட முன்னேற்றம் காணவில்லை.

இந்தக் கல்வி மாநாட்டுக்கு நான் சென்று நடவடிக்கைகளைக் கவனித்தேன். இந்த முறையில் அதிகாரிகளின் மூளைகள் இலங்கிக்கொண்டு சென்றால் நமது இளைஞர்களின் ஒழுக்கம் சீர்கெட்டுப் போகாதா என்று நான் எண்ணினேன். கிறிஸ்தவப் பள்ளிகளில் காணும் ஒழுக்கத்திற்கும் பொதுப் பள்ளிகளில் காணும் ஒழுக்கத்திற்கும் வெகு வித்தியாசம் உண்டு. இதை அறிந்தே நமது செல்வர்கள் தங்கள் குழந்தைகளை கான்வெண்டுகளுக்கு அனுப்புகிறார்கள். அங்கே ஒழுக்கம் சிறப்பாகக் கற்பிக்கப்படுகிறது. அதற்குச் சாதகமாகச் சமயப்படிப்பும் போதிக்கப்

படுகிறது. பொதுப் பள்ளிகளிலும் அவ்வாறே சமயப் படிப்பு போதிக்கப்படுமானல் இத்தன்மையான வித்தியாசம் தோன்ருது. உலகியற் படிப்புக்குச் சாதகமாகச் சமயப் படிப்பு இருந்தால் ஒழிய ஒழுக்கம் முன்னேருது. இந்த உண்மையைத் தற்காலத்து அதிகாரிகள் அறிகிறதில்லை. அறிந்தாலும் அதனை வற்புறுத்திப் புகுத்துவதில்லை.

சைவ சமயம் சிறந்ததென்று கூறுகிருேம். எத்தனைச் சைவ இளைஞர்கள் தங்கள் சமயத்தை அறிந்திருக்கிருர்கள். பெற்ருேர்களுக்கு அதன் அடிப்படைத் தத்துவங்கள் தெரியாது. பள்ளி ஆசிரியர்களுக்குக் கொஞ்சமும் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்தாலும் இளைஞர்களுக்குப் போதிக்கக் கூடாது. இப்படியிருக்கையில் இளைஞர்கள் பிறமதங்களுக்கோ நிரீச்சுரத்திற்கோ செல்லுகிருர்கள் என்ருல் இதில் வியப்பு இல்லை ஏனைய சமயிகள்போல இளமையிலிருந்தே சிறுவர்களுக்குச் சமய உண்மைகளைப் போதித்தால் அவர்கள் நெஞ்சில் அவ்வுண்மைகள் ஆணித்திறம் போல் அமைந்துவிடும் அல்லவா ?

பொதுப்பள்ளிகள் சமய உண்மைகளைப் போதிக்காவிட்டாலும் சரி, சைவச் சங்கங்கள் சமயப் பள்ளிகளை வைத்து நடத்துகின்றனவா ? இல்லை. சமயத் தொடர்பாக சேவாசங்கங்கள், இளைஞர் விடுதிகள், அனுதை விடுதிகள், கல்விச்சாலைகள், மருத்துவச் சாலைகள் இவைகளை நடத்துகின்றனவா ? இல்லையே. ஆகவே நாட்டில் சமயக்கல்வி எவ்வாறு ஓங்கும் ?

இனிமேல் சும்மா இருத்தல் சரியல்ல. நமது சமயச் சங்கங்கள் சமயத் திட்டங்களை ஒழுங்காக ஏற்படுத்தி நமது இளைஞர்களுக்குச் சமயப்படிப்புக் கற்றுக்கொடுக்க வேண்டும். இராமகிருஷ்ணசமாசத்தார் செய்துவரும் முறையில் தொண்டுசெய்தால் அன்றி, இளைஞர்கள் கெட்டுவிடுவார்கள். வெறும் தமிழ்ப்படிப்பு ஒரு சிறிதும் பயன்படாது. அதனேடு சமயக்கல்வியும் புகட்டவேண்டும். இந்தத்திட்டத்தைக் குறிக்கோள் ஆக, நமது சங்கங்கள் கொண்டால் அன்றி நாட்டிற்கு ஈடேற்றம் இல்லை.

"நம்பியாரூரன் நாம்தொழும் தன்மையான்"

புலவர் முருகவேள், பி.ஓ.எல்.

முன்னுரை

"நம்பி யாரூரன் நாம் தொழும் தன்மையான்" என்னும் அழகிய இனிய சொற்றொடர், சைவ சமய ஆசிரியர்களாய நால்வர் பெருமக்களுள்ளே, சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அருமை பெருமைகளை நம்மனோர்க்குப் பல வகையிலும் நினைவூட்டி அறிவுறுத்தி நிற்கின்றது. இவ்வழகிய இனிய அரிய தொடர்,

> "சம்பு வின்அடித் தாமரைப் போதலால்
> எம்பி ரான்இறைஞ் சாய்இஃ தென்னெனத்
> தம்பி ரானைத்தன் உள்ளம் தழீஇயவன்
> நம்பி யாரூரன் நாம்தொழும் தன்மையான்..."

என வரும் பெரியபுராணப் பாடலின்கண், உபமன்னிய முனிவர் கூற்றாக வந்துள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சிறந்துயர்ந்த தன்மைகளைப்பற்றி நீள நினைந்துணர்ந்து நெஞ்சுருக நேரும் போதெல்லாம், இவ்வருமைத் தொடரினைப் பலகாலும் நாம் நினைவுகூர்ந்து மகிழ்கின்றோம். சுந்தர மூர்த்திகளின் சிறப்புக்களை யெல்லாம் உள்ளடக்கிச் சுருக்கமாகக் குறிப்பிடுதற்கு, இதனினும் சிறந்த பொருள் பொதிந்த வேறொரு தொடரினை நாம் காண்டல் இயலாது.

"நம்பியாரூரன்"

சுந்தரர்க்குப் பலவேறு பெயர்கள் உண்டு. பிற சமயாசிரியர்கள் எவரும் கூறிக்கொள்ளா வகையில் "திருமருவும் திரள்தோளான்" "மலைமலிந்த தோளூரன்" "உரையினார் மதயானை நாவலாரூரன்" "மல்லின் மல்குதிரள் தோளூரன்" "அல்லியந் தாமரைத்தார் ஆரூரன்" என இவர் தம்மைத்தாமே புகழ்ந்து குறிப்பிட்டுக்கொள்ளும் அளவுக்குப் பேரழகு வடிவம் உடையவராக விளங்கியிருந்தமையின், மக்கள் இவரைச் சுந்தரர் என்றும், சுந்தரமூர்த்தி என்றும் வழங்கினராதல் வேண்டும். "வடிவு நம்பியாரூரர் செம்பொன்மேனி வனப்பாக......" என வரும் சேக்கிழார் பெருமான் கூற்றும் ஈண்டு நினைவு

கூர்தற்குரியது. "மற்று நீ வன்மைபேசி வன்றொண்டன் என்னும் நாமம் பெற்றனை" எனவும், "தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்" எனவும் சிவபெருமான் அருளிச் செய்தமையால், வன்தொண்டர் நம்பிரான் தோழர் முதலிய பெயர்கள் இவருக்கு ஏற்பட்டன. நம்பியாரூரர் என்பது பெற்றோர்கள் இவருக்கு இளமையில் இட்டு வழங்கிய பெயர். "நம்பியாரூரர் என்ற நாமமும் சாற்றி......" என்பது இதனை வலியுறுத்தும். இனி, 'நம்பி' என்பது ஆண்பாற் சிறப்புப் பெயர் என்றும், 'ஆரூரன்' என்பதே பெற்றோர்கள் இட்ட பெயர் என்றும், பண்டைக்காலத்தில் பாட்டனின் பெயரைப் பேரனுக்குவைத்து வழங்குதல் மரபு என்றும், "அருமறை நாவல் ஆதி சைவன் ஆரூரன் செய்கை" எனப் போதரும் பெரியபுராணப் பாடலால், சுந்தரரின் பாட்டனார் பெயர் 'ஆரூரன்' என்று தெரிதலால், அப்பெயரே இவர்க்குப் பெற்றோர்களால் இட்டு வழங்கப்பெற்றதாகல் வேண்டும் என்றும் நாம் கொள்ளுதல் கூடும். நம்பியாரூரர் என்னும் இப்பெயரையே மந்திரமாகக் கொண்டு ஓதி வழிபட்டுப் 'பெருமிழலைக் குறும்பர் எனும் பரமயோகியார்' வீடுபேறு அடைந்தனர்.

"நாளும் நம்பி யாரூரர் நாமம் நவின்ற நலத்தாலே
ஆளும் படியால் அணிமா தி சித்தி யான அணைந்ததற்பின்"

என வரும் பெரிய புராணப் பாடலால், நம்பியாரூரர் என்னும் பெயரையே மந்திரமாகக் கொண்டு ஓதிவந்தால், அணிமாதி சித்திகள் அனைத்தும் பெறலாம் என உணர்கின்றோம். உபமன்னிய முனிவர், பெருமிழலைக்குறும்பர் போன்ற தவப்பெருஞ் சான்றோர்கள் 'நம்பியாரூரர்' என்னும் பெயரைப் பாராட்டிப் போற்றியமைபற்றியே, ஆசிரியர் சேக்கிழார் பெருமான் "தம்பிரான் அருளினாலே தவத்தினால் மிக்கோர் போற்றும் நம்பியாரூரர் என்ற நாமம்" என விதந்தெடுத்துப் போற்றியருளினர் போலும்! எனவே, நம்பியாரூரர் என்னும் பெயர் எத்துணைச் சிறப்புடையது என்பதனை யாவரும் இனிது உணரலாம்.

"நாம் தொழும் தன்மையான்"

இனி, நம்பியாரூரர் நாம் தொழத் தகுந்தவர் என்பதும், அதற்குக் காரணம் "குணநலம் சான்றோர் நலனே"

என்றபடி, அவர்பால் அமைந்து விளங்கிய சிறந்த பல உயர்ந்த தன்மைகளேயாம் என்பதும், மேலைத்தொடரால் நாம் அறியக் கிடைத்தலின், நாம் தொழத்தகுந்தவ ராகும்படி, நம்பியாரூரர்பாற் சிறந்து விளங்கிய தன்மைகள் சிலவற்றையேனும் ஆராய்ந்துணர்ந் துய்தல், நம்மனோர்க்கு இன்றியமையாத கடமையாகும். நம்பியார் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர்; "நிரம்பிய வாழ்க்கை" நடாத்தியவர். திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூரில், மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமைசெய்யும் வேதியர் குலத்துள், மேம்படு சடையனார்க்கு, எதமில் கற்பின் வாழ்க்கைமனை இசைஞானியார்பால், தீதகன்று உலகம் உய்ய அவர் திருவவதாரம் செய்தார். தெருவில் தேருருட்டும் சிறு பருவத்தில், நரசிங்கமுனையர் என்னும் நாடுவாழ் அரசர் கண்டு, இவரை அன்பினால் மகன்மை கொண்டார். அரசர் காதற் பிள்ளையாய் வளர்ந்துவந்த இவர், இளமையிலேயே அளவில் தொல் கலைகள் ஆய்ந்து தேர்ந்தார். 'நுணங்கிய கேள்வி மேலோன்' என விளங்கினர். "முடியால் உலகாண்ட மூவேந்தர்களும்" மதித்து வணங்கும் வண்ணம் எல்லாப் பெருஞ்சிறப்பும் உடையவராகத் திகழ்ந்தார். இறைகளோடிசைந்த இன்பமும், இன்பத்தோடிசைந்த வாழ்வும் இவர்க்கு அமையப் பெற்றிருந்தன. இங்ஙனம் மகிழ்ச்சியின் மைந்துற்றிருந்த போழ்தும், "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்னும் பேருண்மையினை நன்கறிந்திருந்தார். "மத்தயானை எறி மன்னர் சூழ வருவீர்காள், செத்த போதில் ஆரும் இல்லை, சிந்தையுள் வைம்மின்கள்" என இவர் அனைவர்க்கும் அறிவுறுத்துகின்றார்.

'கற்ற கல்வியினும் இனியவ'னாகை இறைவனைக் கண்டுணர்ந்து போற்றிய இவர், சங்ககால இலக்கியங்கள் பலவும் கற்றிருந்தாராதல் வேண்டும்! "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை" எனப் பாடியிருத்தலொன்றே, இவர்தம் சங்கநூற் புலமைக்குச் சான்று பகரும். "குமணமாமலைக் குன்றுபோல் நின்று தங்கள் கூறை ஒன்றின்றியே" "சொல்லரும் புகழான் தொண்டைமான்" எனவரும் இவர்தம் பாடற்பகுதிகளால், குமணன், தொண்டைமான் இளந்திரையன் முதலிய சங்ககால அரசர்களையும் இவர் குறிப்பிட்டிருத்தல் புலனாகின்றது. திருநெல்

வாயில் அரத்துறைப் பதிகத்தில் திருக்குறள்கள் சில வற்றை இவர் எடுத்தாண்டிருப்பது, 'கற்பவை' கற்கும் முறையினை நமக்குத் தெற்றெனவிளக்குகின்றது. திருக் கருப்பறியலூர்ப் பதிகத்தில் "விருந்தாய சொன்மாலை கொண்டேத்தி" எனவரும் தொடரை, ஆரசிரியர்நச்சினார்க்கினியர் அவர்கள் தொல்காப்பியத்துட் போதரும் 'விருந்து' என்னும் பகுதிக்கு மேற்கோளாகக் கூறினர் என்பராகலின், ஆளுடைய நம்பிகள் ஆய்ந்து தேர்ந்த நூல்களுள் தொல் காப்பியமும் ஒன்றுதலை உணர்கின்றோம். "இணைகொள் ஏழெழுநூறு இரும்பனுவல் ஈன்றவன் திருநாவினுக்கரை யன்" என எண்ணித் தொகையையும் குறிப்பிட்டுப் பாடியிருத்தலால், கற்பவை கசடறக் கற்றுயர்ந்த இவர்தம் சீர்த்தி தெரிகின்றது. மணிவாசகரின் திருவாசகமும் சுந்தரரின் மனங்கவர்ந்த நூல்களுள் ஒன்றாக இருந் திருத்தல்கூடும் என்று தோற்றுகின்றது. "உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்து ஈயின் ஒப்பாய் விழைதருவேன்" என்னும் திருவாசகத்தின் எதிரொலியை, "வாணார் நுதலார் வலைப்பட்டு அடியேன் பலவின்கனி ஈயது போல்வதன்முன்......உய்யப் போவதோர் சூழல் சொல்லே" என்னும் வரிகளில் நாம் கேட்கின்றோம். "தில்லைவாழ் அந்தணர்" எனச் சுந்தரர் குறிப்பிட்டது, மாணிக்கவாசகரையே யாகலாம் என்று கருதி ஐயுறும் நல்லறிஞர்கள் சிலரும்கூட உண்டு.

இனி, "சடையன்றன் சிறுவன் இசைஞானி காதலன்" எனப் பலவிடத்தும் இவர் தம்மைச் சுட்டிக்கொள்ளு தலால், தாய் தந்தையர்பால் இவர்க்கிருந்த பேரன்பு புலப் படுகின்றது. "நாதனுக்கூர், நமக்கூர், நரசிங்கமுனையரை யன் ஆதரித்து ஈசனுக்கு ஆட்செய்யும் ஊர், அணி நாவ லூர்" எனவரும் இவர்தம் திருமொழியால், தம்மை எடுத்து வளர்த்துப் போற்றிய நரசிங்கமுனையரையர்பால் இவர் கொண்டிருந்த நன்றியுணர்வும், ஊர்ப்பற்று நாட்டுப்பற்று முதலியனவும் வெளிப்படுகின்றன. இவர்தம் இல்லற வாழ்க்கை காதலின்ப நலம் சிறந்து திகழ்கின்றது. "பனை மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெரு மானே" என்பனபோன்ற பகுதிகள், இவர்களின் தூய காத லின்பவாழ்வின் சிறப்பினைத் தெளிவிக்கின்றன. பெற்ற சிற்

றின்பமே பேரின்பமாய் அங்கே முற்றவரும் பரிசு அமையு மாறு, அருளுணர்வு மீக்கூர, இவர் காதலின்பநலம் நுகர்ந் தமை கருதுதற்குரியது. தொல்காப்பியர் விதித்த தவநெறி வாழ்க்கையினையே, இவர் சிவனுறையும் திருத்துறையூர் சென்றணைந்து, பவநெறிக்கு விலக்காகும் பதிகம்பாடிப் பெற்றனர்போலும்! "அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல்" எனத் தொல்காப்பியரும் திருவள்ளுவரும் வகுத்துரைத்த 'தவநெறி' வாழ்க்கைக்குச் சிறந்த இலக்கிய மாக விளங்குபவர் சுந்தரரேயாவர். இச்சிறப்புடைமை பற்றியே "மிக்க விழுத்தவ வேந்தர்" "மேரு வரையின் மேம்பட்ட தவத்தான்" என்றெல்லாம் இவர் புகழ்ந்து போற்றப் பெற்றுள்ளார் எனலாம். இல்லற வாழ்க்கையின் தொல்லைகளுக்கு இடையேயும் சுந்தரர் இறைவனைச் சிறிதும் மறவாதிருந்தமையை, "பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்" என்னும் பதிகம் காட்டுகின்றது. இப்பெருஞ் சிறப்பினை விதந்தெடுத்து வியந்தே,

"செல்வநல் ஒற்றி யூரன் செய்யசங் கிலியால் ஆர்த்து,
மல்லலம் பாவை தன்கண் மாழ்குற அமிழ்த்து மேனும்,
அல்லும்நன் பகலும் நீங்கா தவன்மகி ழடியில் எய்தி,
நல்லஇன் படைந்தி ருப்பன் நம்பியா ரூரன் தானே"

எனச் சிவப்பிரகாசர் இருபொருள்பட அழகுறப் புகழ்ந்து மகிழ்ந்தார். "எடுதரும் மலர்க்குழலார் முலைத்தலைக்கே, இடைக்கே, எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும், இறை ஞானம் கூடுமவர் கூடரிய வீடும் கூடிக் குஞ்சித்த சேவடி யும் கும்பிட்டே இருப்பர்" என்னும் சிவஞானசித்தியார் திருப்பாடலுக்கு நம்பியாரூரரே நல்ல எடுத்துக் காட்டா வார். இறைவனை நினையாது கழிந்த நாட்களை இவர், "ஓவும் நாள், உணர்வு அழியும் நாள், உயிர்போகும் நாள், உயர் பாடைமேற் காவும் நாள் என்று இவையலாற் கருதேன்" என இழித்துப் பழித்துக் கூறியிருப்பது, நம்மனோர் நினைவிற் பதிக்கற்பாலதாகும்.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் போன்ற நம் சமயச் சான்றோர்கள்பால், நம்பியாரூரர் கொண்டிருந்த நன்கு மதிப்பிற்கு எல்லையே இல்லை. "நாவின்மிசை அரையன்றெடு தமிழ்ஞான சம்பந்தன் யாவர் சிவனடியார்களுக்கு அடி

யான் அடித்தொண்டன்" "நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை" எனவரும் பாடல்கள் இவ் வுண்மையைச் செவ்விதின் உணர்த்தும். "உடைய அரசு, உலகேத்தும் உழவாரப் படையாளி, விடையவர்க்குக் கைத் தொண்டு விரும்புபெரும் பதியை, மிதித்து அடையுமதற்கு அஞ்சுவன்" என்று சித்தவடமடம் சேர்ந்ததும்; "பிள்ளை யார் திருவவதாரம் செய்த பெரும்புகலியுள்ளும் நான் மிதி யேன்" எனச் சீர்காழிப்பதியின் ஊரெல்லைப்புறம் வணங் கிப் போந்ததும் பிறவும், ஆரூரரின் அருமைமிக்க அடக்க வுணர்வினைப் புலப்படுத்துகின்றன. ஞானசம்பந்தர்க்கும் நம்பியாரூரர்க்கு மிடையே பலதிறப் பண்பொப்புமைகளை நாம் காண்கின்றோம். நம்பியாரூரர் தமக்குரிய இனிய தலைவராக ஞானசம்பந்தப் பெருமானையே கொண்டிருந் தார் என்றுணர்த்தும் சான்றுகள் பலப்பல வுள்ளன.

சேரமான் பெருமாளும் நம்பியாரூரரும் கொண்டிருந்த நட்பின் சிறப்புப் பெரிதும் பாராட்டற்பால தொன்றாய்ப் பிறங்குகின்றது. "இன்ப வெள்ளத் திடைநீந்தி ஏற மாட்டா தலைவார்போல், என்பும் உருக உயிர் ஒன்றி உடம் பும் ஒன்றும் என இசைந்து" தழுவி மகிழ்ந்து நின்ற இவர் களின் ஒப்புயர்வற்ற சிறந்த நட்பின் திறம், நட்பின் இலக் கணத்திற்கே நல்லதோர் எடுத்துக்காட்டாக இலங்குகின் றது. "பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன் தகைமைக்கண் தங்கிற் றுலகு" என்பதற் கேற்பப், பகைமை பாராட்டுபவர்களையும்கூடப் பண்பார்ந்த நண்பர் களாக்கிக் கொள்ளவல்ல பெருந்திறன் படைத்தவர் நம்பி யாரூரர் என்பதற்கு, விறன்மிண்டர் - ஏயர்கோன் கலிக்காமர் வரலாறுகளே கரிபோக்கும். தோழராகப் பழகுதற்கு இனிய துணைவர் இவர் என்பது, சோமாசிமாறர் - கோட்புலி யார் முதலினோர்பால் இவர் கொண்டிருந்த தொடர்பால் நன்கு விளங்கும். கோட்புலியாரின் புதல்வியர் இருவரை யும் மணந்துகொள்ள உடன்படாது "தொடிசேர் தளிர்க்கை இவர் எனக்குத் தாய மக்கள்" எனக்கூறி, அது முதல் "வனப்பகை - சிங்கடியப்பன்" எனத் தம்மைக் குறித்துக் கொள்வது, இவர்தம் சான்றாண்மையை இனையதென உணர்த்தும். அவிநாசிப் பதியில் முதலையுண்ட மதலையை

வருவித்துக்கொடுத்த அருள் நிகழ்ச்சி, ஆரூரரின் அளப்பரிய இரக்கவுணர்வை விளக்கப் போதிய சான்றாகும்.

நம்பியாரூரரின் பாடல்களில் ஞானசம்பந்தர் பாடல்களின் சாயல் காணப்படுகின்றது; தோழமை இயல்பைக் காட்டும் நகைச்சுவை நலங்கள் நிரம்பியுள்ளன. "வாழ்ந்து போதீரே!" "எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானிரே?" என்பன போன்ற பகுதிகள், இறைவன்பால் இவர் பெற்றிருந்த நட்புரிமையின் பெற்றிமையை நன்கினிது விளக்குகின்றன. "பாதியோர் பெண்ணை வைத்தாய்! படர்சடைக் கங்கை வைத்தாய்! மாதர் நல்லார் வருத்தமது நீயும் அறிதி யன்றே?" முதலிய பாடல்கள் இவரது சொல்லாற்றலைப் பல்லாற்றானும் விளக்க வல்லனவாகும். "பத்தூர்புக் கிரந்துண்டு" எனத் தொடங்கும் திருநாகைக் காரோணப் பதிகத்தால் "வாழ்க்கை வாழ்வதற்கே" என்பதுதான் இவர் தம் கோட்பாடு போலும் எனத் தோன்றுகின்றது. "நீதியில் ஒன்றும் வழுவேன் நிட்கண்டகம் செய்து வாழ்வேன்" "நமர் பிறர் என்பது அறியேன்" "சொல்லிற் குலாவன்றிச் சொல்லேன்" என்பன போல, இவர் தம் பண்புகளைத் தாமே குறிப்பிட்டுரைத்திருத்தல், இவரது சிறந்த தன்மைகள் இவையிவை என உணர்ந்துகொள்ள நம்மனோர்க்குப் பெரிதும் துணைபுரிகின்றது.

முடிப்புரை

நம்பியாரூரர் திருநெறி இயக்கத்தின் மாபெருந் தலைவர்களுள் ஒருவர். திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் தொடங்கி நடாத்திப் பரப்பிய திருநெறி இயக்கத்தினை, அவர்களுக்குப் பின்னர்த் தலைவராகப் போந்து, அவர்தம் அடிச்சுவட்டில் நன்கினிது காத்து வளர்த்து, என்றும் நின்று நிலவுமாறு செய்தருளிய பெருந்தகையாளர் நம்பியாரூரரே யாவர். தொல்காப்பியர் திருவள்ளுவர் போன்ற சான்றோர்கள் அறிவுவெளியில் நின்று தனித்திருந்து ஆராய்ந்து, தத்தம் நூல்களை இயற்றித் தமிழ்த் தொண்டாற்றிப் போந்தனர். ஆனால், திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் முதலிய சமயாசிரியர்கள்தாம், முதன் முதலில் மக்களோடு மக்களாகக் கலந்து பழகி, பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும்பெற்று, நாட்டு மக்களிடையே ஒரு

மாபெரும் இயக்கத்தினைத் தோற்றுவித்துச், சங்ககாலத்திற்குப் பின்னர் இடைக்காலத்தில் தமிழ் நாட்டிற்கு நேர்ந்த எத்துணையோ பல கேடுகளையெல்லாம் நீக்கிப் போக்கித், தமிழகத்திற் புதியதொரு பெரும் புரட்சியும் மறுமலர்ச்சியும் விளையுமாறு செய்தருளினர்! இஞ்ஞான்றை அரசியற் புரட்சிகளைவிட, நால்வர் பெருமக்களின் அருளியற் புரட்சி எத்துணையோ பலமடங்கு ஏற்றமுடையதாகும். இத்தகைய திருநெறி அருளியற்புரட்சி இயக்கத்தின் வளர்ப்புத் தந்தையாகவும், மாபெருந் தலைவராகவும், வரலாற்றாசிரியராகவும் வயங்கிய பெருந்தகுதி பொருந்திய பெருந்தகையாளர் நமது நம்பியாரூரர் பெருமான்! சுருங்கக் கூறல் வேண்டின், வளமிழந்து வறண்டு கிடந்த இடைக்காலத் தமிழ் நிலத்தைப் பண்படுத்திப், புன் சமயக் களை எடுத்துப், பத்தி விதை விதைத்துத் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் சென்றனராக, அன்பு நீர்பாய்ச்சிப் பாதுகாத்துச், சைவப் பயிராகத் தழைத்தோங்கி வளருமாறு செய்தவர் நம்பியாரூரர் பெருமானே யாவர் என ஒருவாறு கூறி முடிக்கலாம்.

"படியில் நீடும் பத்திமுதல், அன்பு நீரிற் பணைத்தோங்கி,
வடிவு நம்பி யாரூரர் செம்பொன் மேனி வனப்பாகக்,
கடிய வெய்ய இருவினையின் களைகட் டெழுந்து, கதிர்பரப்பி,
முடிவி லாத சிவபோகம் முதிர்ந்து, முறுகி விளைந்ததால்!"

என ஆசிரியர் சேக்கிழார் அடிகளும், இவ்வுண்மையினை அழகுற விளக்கியருளி யிருத்தல் காண்க! நம்பியாரூரரால் தமிழ் மக்கள் அடைந்துள்ள நன்மைகளுக்கு அளவேயில்லை. அவர் அருளிச்செய்த திருத்தொண்டத்தொகை ஒன்றினால் மட்டுமே, தமிழ்நாடு எண்ணிறந்த பல நன்மைகளை எய்தியுள்ள தெனலாம். சேக்கிழாரடிகள் திருத்தொண்டத் தொகையின் சிறப்பினைப் பலவிடத்தும் பாராட்டி யுரைத்திருத்தல் இதனை வற்புறுத்தும். எனவே, திருத்தொண்டத் தொகையினை அருளிச்செய்தவர் என்பதொரு காரணமே, "நம்பியாரூரர் நாம்தொழும் தன்மையர்" என்று நம்மனோர் நன்கினிது துணிந்துணர்ந்து கொண்டு, வணங்கி யுய்தற்குச் சாலும்!

——

உருவாருவம்

அமுகுமநியன்

இறைவனுடைய வடிவங்களைத் தொழுவதற்காகப் பயன்படுத்தும்போது அருவம், உருவம், உருவாருவம் என்ற மூன்று வகையினவாக வகுத்திருக்கின்றார்கள். அருவம் என்பது உருவம் இல்லாதது. அந்த நிலை தொழுவதற்கு மிகவும் கடினமானது. உயர்ந்த ஞானிகள் அதனை வழிபடுவார்கள். உருவம் என்பது காட்சிக்குப் புலனாவது. நடராச உருவம், தென்முகக் கடவுள் உருவம், இவைகள் இந்தப் பிரிவைச் சேர்ந்தவைகள். இனி உருவாருவம் என்பது குறித்த உருவம் அற்றதும், ஆனாலும் ஒரு உருவம் கொண்டதுமானது. இலிங்க உருவம் என்பது அந்நிலையைச் சார்ந்தது. இது எளிதில் தொழத்தக்கது. இதுவே எல்லாச் சிவாலயங்களிலும் உள்ளது. பண்டைக் காலத்தில் வழிபடுவதற்காக ஒரு உருண்டைச் சிலையைவைத்துத் தொழுது வந்தவர்கள், பின் நாளிலும் அதையே சிறந்த வடிவமாகத் தொழத் தொடங்கினார்கள்.

சிவாலயங்களில் மூலத்தானங்களில் இலிங்க வடிவத்தை வைத்துத் தொழுவார்கள். அதுதான் உருவாருவம். மற்றப் பகுதிகளில் உருவ வடிவங்களாகிய நடராசர், தென்முகக் கடவுள் இவைகளை வைத்து வழிபடுவார்கள். விழாக்களில் உருவ வடிவங்கள் மட்டும் எழுந்தருளச் செய்வார்கள். இவைகளில் மூலத்தானத்து மூர்த்தியைப்பற்றிச் சிறிது விளங்கவைத்தல் பயன்தரும். அதற்கு இலிங்கம் என்று ஏன் பெயர் வந்தது? அதன் இயல்பு என்ன என்று அரைகுறையாகப் படித்தவர்கள் கேட்கிறார்கள். மேற்கர்களும் அக் கேள்விகளைக் கேட்டும் பல பொய்க் கூற்றுக்களைக் கூறியும் வருகிறார்கள். ஆகவே அதைப்பற்றிச் சிறிது விளக்குவோம்.

இலிங்கம் என்ற சொல் வடமொழி. அதன் பொருள் குறி என்பதாகும். அச்சொல் சமயப்பாங்கில் குறிக்கும் போது இலிங்க=லயம்+கம்=தோற்றம் என்பதாகும். ஆகவே படைத்தல் முதலிய ஐந்து தொழில்களைச் செய்யும்

இறைவன் திருவுரு என்று பொருள்படும். இப்பொருளே அதன் உருவத்திலும் விளக்கப்படும். இந்நிலையை விளக்கும் தமிழ் நூல்கள், ஒலி முதலிய புலன்களுக்கும் மனோ வாக்குகளுக்கும் எட்டாததாயும், அளவில்லாத பேரொளியாய்த் தனக்குமேல் நாயகம் இல்லாததாயும், அருவமாய், நிர்மலமாய், குணரகிதமாய், வண்ணமற்றதாய், தோற்றுதற்கும் ஒடுங்குதற்கும் எதுவாய் ஆன்மாக்களின் தியான பாவனையின்பொருட்டு நிட்களசகளத் திருவுருக்கொண்டதுமான ஒரு நிலை என்று கூறும். இலிங்கம் ஞானசக்தி உருவம். பீடம் கிரியாசக்தி உருவம். ஆகலின் இவ்விரண்டும் சிவபெருமானுடைய திருவடிவமாகும். இது திரிமூர்த்தி உருவமும், பிரணவ உருவமும் ஆகும்.

இவ்வாறு சமய நூல்கள் சொல்லியிருக்க, இதனைவிட்டு அச்சொல்லுக்குரிய வேருெரு இலக்கணப்பொருளை வைத்துக்கொண்டு, அதற்கு ஆண்குறி என்று பொருள்படுத்தியும், இச்சமயத்தார் ஆண் குறியைத் தொழுகின்றனர் என்றும் மேற்கர்கள் கூற, நமது நாட்டிலும் அறிவற்ற பலபேர் இப்பொருளையே கூறி ஏளனம் செய்கிருர்கள். அண்மையிலே சென்னையில் வெளியாகும் ஓர் ஆங்கில வாரத்தாளில் இதைப்பற்றி ஒரு நிருபர் எழுதியிருக்கிருர். அரசியல் பொறுப்பில் சிற்றம் கொண்டிருக்கும் அவர் தம்மைக் கீழ்ச் சாதியான் என்று கூறிக்கொண்டு, தம்மை மேல்சாதியார் தாழ்த்தி அடிமைப் படுத்துகிருர்கள் என்றும், அவர்களுடைய சமயம் இழிவானது என்றும் சொல்லி, அதற்குச் சான்ருக ஒரு அமெரிக்கன் இங்குவந்து கோயில்களைப் பார்த்துவிட்டு இவைகளில் ஆண் குறிகளைத் தொழுகிருர்கள் என்றும், இவர்கள் இன்னும் தாழ்ந்த பண்பாட்டில் உள்ளவர்கள் என்றும் கூறியதை எடுத்துக்காட்டி, இந்தக் காரணத்தினுல்தான் கோயில்களில் ஆபாசமாக வடிவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன என்றும் எழுதிவிட்டு, அரசியலில் தமக்கு உரிமைவேண்டும் என்றும், அதன்பொருட்டு இச்சமயத்தையே ஒழிக்கவேண்டும் என்றும் காரசாரமாக எழுதியிருக்கிருர்.

இப்படிப்பட்ட கட்டுரைகள் அடிக்கடி அண்மையிலே வந்துகொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் பிற சம

யத்தார்கள் மேம்பாடு அடைந்து, நமது பண்டைச் சமயங்களை எப்படியாவது தொலைக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணம் கொள்வதுதான்.

இந்த நிருபர் தலையும் காலும் தெரியாமலே ஒன்றுக்கொன்று முரண்படுத்தி எழுதியிருக்கிறார். மூலத்தானத்தில் உள்ள லிங்க வடிவத்திற்கும் தூண்களிலும் தேர்களிலும் உள்ள சிற்பின்பச் சித்திரங்களுக்கும் தொடர்பு இல்லை என்று அறியவேண்டும். முதலாவது சமய உருவம் இரண்டாவது புராணக் கதைகள் அல்லது திருஷ்டிபரிகாரங்கள். இவைகள் சமயக் கொள்கைகள் அல்ல.

மேலும் இலிங்கம் என்பதற்கு மானுடக்குறி என்ற பொருள் ஒன்று இருந்தபோதிலும், சமயத் தொடர்பில் அப்பொருள் இல்லை. ஆலயம் தொழுகிறவர்கள் ஆண்குறி என்ற நினைவோடு தொழுவதே இல்லை. சமய நூல்களில் அந்த உணர்ச்சி புகட்டப்பெறுதலே இல்லை.

இப்படியிருக்க மாச்சரியம்கொண்டு பிறரைப் பழிக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தினால், சிலபேர் கட்டுரைகள் எழுதுவது வருந்தத் தக்கது. சமயக்கொள்கைகளின் உண்மைப்பொருளை அறியாமல் குற்றம் கூறுவதே தம் தொழிலாகக் கொண்டிருக்கும் சில மக்கள் இவ்வாறு எழுதுவதை நாம் தடுக்கவேண்டும். இந்தக் கட்டுரைகளைப் படிக்கும் நமது இளைஞர்கள் பொருளை அறியாமல் குற்றம் குறைகளையே அறிந்து தாழ்ச்சி அடைவதை நாம் நிறுத்த வேண்டும்.

> "காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்,
> நீள்நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்"
>
> —சேக்கிழார்.

——

பட்டினத்தார் பாடல்*

உலகில் உள்ள எல்லா உயிர்களும் விரும்புவது இன்பமே. அவ்வின்பமும், பேரின்பம், சிற்றின்பம் என இருவகைப்படும். பேரின்பம் என்றும் நிலைத்த இன்பமாகும். இவ்வுலக வாழ்வில் நாம் நுகரும் இன்பங்களுள் கவியின்பமே மிகமிகச் சிறந்த இன்பமாகும். கற்றல், கேட்டல்களால் சிறந்தோராய், வேறுபட்ட மனப்பான்மை யில்லாதோராய், நுண்ணறிவுடையோராய் உள்ளோர் ஒன்றுகூடி, ஆன்றோர் கவிகளை ஆராயும் காலத்தே அடையும் இன்பம், உம்பர் உறைவார் பதியகத்தும் இன்றாம். திருநாவுக்கரசரது திருப்பதிகங்களையே குருவாகக்கொண்டு போற்றுபவர்கட்குப் பிறவித் துன்பமில்லை. பேரின்பமே உளதாம்.

" திருநாவுக் கரசடி யவர்நாடற் கதிநிதி தெளிதேனைத்
தினியசொல் மடவார் ஊர்ப் பசிமுதல்
வருவானத் தரிவையர் நடமாடிச் சிலசில வசியாகச்
சொலுமவை துகளாகக் கருதிமெய்
உருஞானத் திரள்மனம் உருகாநெக் கழுதுகண்
உழவாரப் படைகையில் உடையான்வைத் தனதமிழ்,
குருவாகக் கொடுசிவன் அடிசூடத் திரிபவர் குறுகார்புக்
கிடர்படு குடர் யோனிக் குழியிலே "

—திருநாவுக்கரசர் திரு ஏகாதசமாலை—நம்பியாண்டார் நம்பிகள்.

உள்ளம், உரை, செயல் மூன்றினும் தூயராய், திருவருட் செல்வம் உடையராய், செவ்விய மதுரம் சேர்ந்த நற்பொருளிற் சீரிய கூரிய தீஞ் சொல் வவ்விய கவிஞராய் உள்ளாரது செஞ்சொற் கவிகள் ஆராயுங்காலத்தில் இன்பம் அளிப்பதோடமையாமல், பேரின்பத்தையும் அளிக்க வல்லன. நமது பட்டினத்துப் பிள்ளையார் பாடல்களுள், கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை திருவேகம்ப முடை

---

*சென்னை அடியார் மன்றத்தில் 7-8-56-ல் தவத்திரு ஐயாறடிகள் செய்த சொற்பொழிவுச் சுருக்கம்.

யார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபாஒருபது ஆகிய ஐந்து பிரபந்தங்களும் பதினோராந்திருமுறையிற்சேர்ந்தவை.

கோயில் நான்மணிமாலை 4ம் பாடலாக உள்ள ஆசிரியப்பாவில் நமது பட்டினத்துப் பிள்ளையார், தில்லையம்பல வாணனை,

“ உரையின் வரையும் பொருளின் அளவும்
இருவகைப் பட்ட எல்லையும் கடந்து
தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
செம்மை மனத்தினும் தில்லைமன் றினும்நடம்
ஆடும் அம்பல வாண ”

என்று விளித்தார்.

நினைப்பவர் செம்மைமனம் : அகச்சிற்றம்பலம். தில்லை மன்று : புறச்சிற்றம்பலம்.

அம்பலவாணனை விளித்தவர் வேண்டிய வரம் யாதோ என்றால், கடவுளே நினது திருவருட் செல்வத்தைப் பெற்றால், கண்ணாற் காண முடியாததாகிய செவிப்புலனுமனுவும், வானுற நிமிர்ந்து காட்டும் மேருமலையாம். கொசுவும் கருடனும். ஆதலின், நின்தமர் பெயர் எழுதிய வரி நெடும்புத்தகத்திலே, மிகச்சிறியனாகிய என்னையும் நின் தமர்களில் ஒருவனாக வரைய வேண்டுமென்ற வரம் வேண்டினார். தமர்=தம்மவர், தம்மோடு பயின்றோர். சிவ பெருமானுடைய தமர்கள் அன்பர்களே.

“ புற்புதச் செவ்வியின் மக்கள் யாக்கைக்கு
நினைப்பினும் கடிதே இளமை நீக்கம்
அதனினும் கடிதே மூப்பின் தொடர்ச்சி
அதனினும் கடிதே கதுமென மரணம் ”

—கோயில் நான்மணிமாலை - 32

இதனால் இளமை நிலையாமையையும், யாக்கை நிலையாமையையும் அறிவித்தார்.

“ தாதை யொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னா யோவென் றழைப்பமுன் நின்று
ஞான போனகத் தருளட்டிக் குழைத்து

ஆனுத் திரளை அவன்வயின் அருள
அந்தணன் முனிந்து தந்தார் யாரென
அவனைக் காட்டுவன் அப்ப வானேர்
தோஒ டுடைய செவியன் என்றும்
பீடுடைய பெருமான் என்றும்
கையிற் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை யாங்கே ''

—திருக்கழுமல மும்மணிக்கோவை.

இப்பாடலில் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு ஞானப்பால் ஊட்டியருளிய திறத்தினை விளக்கினர்.

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 19ஆம் பாடலாக உள்ள ஆசிரியப்பாவில், திருவிடைமருத, திரிபுராந்தக என்று கடவுளை விளித்து, உலகிலே தோன்றிய மக்கள் சிறந்த முத்தியின்பத்தை விரும்புகின்றனர். அதனை அடைவதற்கு மக்கள், மனைவி, உறவினர் முதலியோரையும், மனை, நிலம், பொருள் முதலியவற்றையும் துறக்கின்றனர். காடுகளை நோக்கியும், மலைகளை நோக்கியும் செல்கின்றனர். வெப்பம்மிக்க கோடைக்காலத்தில் ஐவகை நெருப்பிடை நின்று தவம்புரிகின்றனர். குளிர்மிக்க மழைக்காலத்திலும், பனிக்காலத்திலும் தண்மையான நீரிடை நின்று தவம் புரிகின்றனர். சடையைப் புனைகின்றனர். தலையை மொட்டை அடிக்கின்றனர். உடையைத் துறக்கின்றனர். உண்ணுமே கிடக்கின்றனர். காய், கிழங்கு, காற்று, சருகு என்றிவற்றுள் நேர்ந்தவற்றை அருந்துகின்றனர். களர்நிலமோ, கல்நிலமோ, வேறெந்த இடமோ நேர்ந்த இடத்திலே கிடந்து உறங்குகின்றனர். இவ்வுடம்புதானே தளர்ச்சி அடையும் இயல்புடையது. இத்தகைய உடம்பை மிகுதியும் ஒறுக்கின்றனர்.

நாங்களோ இவற்றை எல்லாம் செய்யாமல் என்ன செய்கின்றோம் என்றால், பழுதின்றுயர்ந்த எழுநிலைமாடத்திலும், தென்றல் உலாவும் முன்றிலகத்தும், அழகிய மண்டபங்களிலும், வாவிக்கரையிலும், செய்குன்றிலும், ஆண்டாண்டிட்ட விருப்புறு கட்டிலின்மேல், பரப்பிய ஐவகை அமளியிலே, அஞ்சொல் மடந்தையர் ஆகந் தோய்கின்றோம். அறுசுவை யுணவைப் பலரோடும் உண்கின்றோம். பூசுவன

பூசுகின்றோம். புனைவன புனைகின்றோம். மைந்தர், மனைவி, உறவினர் என்றிவருடன் அளவளாவி மகிழ்கின்றோம். எனினும் நின் மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாதோதி, சிந்தையை நின்வழிச் செலுத்தலின் அவர்களடையும் அந்த முத்தியினையும் இழந்திலம். அவர்கள் அடைந்த அத்திறத்தினை நாங்கள் அடைவதன் காரணம் நின்னது பெருமையே. வல்லான் ஒருவன் கைம் முயன்றெறியினும், மாட்டா ஒருவன் வாளா எறியினும், நிலத்தின் வழாக் கல்லேபோல, நலத்தின் வழார் நின்நாமம் நவின்றோர் என்றார்.

மற்றும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் எனவழங்கும் நம்பியாரூரர் ஆகிய மூவர் தேவாரத் திருப்பதிகங்களை, நமது பட்டினத்துப் பிள்ளையார் " வித்தகப் பாடல் " என விதந்தோதினர்.

வித்தகம் : ஞானம். உண்மையறிவு

திருநாவுக்கரசர் திருப்பதிகங்களை மாதவச் சிவஞான யோகிகள் "வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல் தொடையருச் செவ்வாயும்" என்று சிறப்பித்தார். நம்து பட்டினத்துப் பிள்ளையார் திருவிடைமருதூர் மும்மணிக் கோவை கடைசிப் பாடலில், " வித்தகப் பாடல் முத்திறத்து அடியரும் " என்ற அளவில் அமையாமல், மாணிக்க வாசகரை, " திருந்திய அன்பிற்பெருந்துறைப் பிள்ளையும் " என்று சிறப்பித்தார்.

திருவொற்றியூர் ஒருபாஒருபஃது என்னும் பிரபந்தம், முதற்பாடலில், திருவொற்றியூரைச் சிறப்பிக்கத் தொடங்கி " இருநில மடந்தை இயல்பினின் உடுத்த, பொருகடல் மேகலை முகமெனப் பொலிந்த, ஒற்றிமாநகர் உடையோய்" என்று திருவொற்றியூர்த் தியாகராசப் பெருமானை விளித்தார். " உலவாத் தொல்புகழ் ஒற்றியூர் " ' ஓவாத் தொல் புகழ் ஒற்றியூர ' எனவும் விளித்தார்.

தொன்மை+புகழ்=தொல்புகழ். தொன்மை=பழைமை. இது பண்பு. பண்பு தனித்து நில்லாது. ஒரு பொருளைச் சார்ந்து நிற்பதாகும். தொன்மை தொல்லோனைச் சார்ந்து நிற்பது. தொன்மையுடையோன் தொல்லோன். "சொற்பதம் கடந்த தொல்லான்-தொல்லோன் " என்று திருவாதவூர் அடிகள் சிவபெருமானைக் குறிப்பிட்டார்.

“ ஓடுவிழுந்து சீப்பாயும் ஒன்பதுவாய்ப் புண்ணுக்கு
இடுமருந்தை யானறிந்து கொண்டேன்—கடுவருந்தும்
தேவாதி தேவன் திருவொற்றி யூர்த்தெருவில்
போவார் அடியிற் பொடி ”

“ வாவியெல்லாம் தீர்த்தம் மணலெல்லாம் சிவலிங்கம்
காவணங்க ளெல்லாம் கணநாதர்—பூவுலகில்
ஈது சிவலோகம் என்றென்றே மெய்த்தவத்தோர்
ஓது திருவொற்றி யூர் ”

இவ்விரண்டு பாடல்களும் பதினோராந் திருமுறையில் இல்லை.

பூவுலகிலே இதுவே சிவலோகம், இதுவே சிவலோகம் என்பதாக மெய்த்தவத்தோர் விதந்தோதும் திருவொற்றியூரிலே உள்ள, வாவி எல்லாம் தீர்த்தமாகவும், மணல் எல்லாம் சிவலிங்கமாகவும், காவணங்களெல்லாம் கணநாதர்களாகவும் நமது பட்டினத்துப் பிள்ளையார்க்குக் காட்சி அளித்தன.

தீர்த்தம் : தீர்த்து வைப்பது. உடற்பிணி, உள்ளப் பிணி பிறவிப்பிணி என்றிவற்றை எல்லாம் தீர்த்து வைப்பது தீர்த்தம் என்க. உடற்பிணி யுற்றவர்கள், அந்நோயினைத் தீர்ப்பான் கருதி, திருக்கழுக்குன்றம் சங்குதீர்த்தத்திலே நீராடி அந்நோயினைத் தீர்த்துக்கொள்கின்றார்கள். திருக்குற்றாலம் நீர்வீழ்ச்சி, தாமிரபரணி என்னும் பொருநையாறு முதலிய இடங்களிலும் நீராடித் தீர்த்துக்கொள்கின்றார்கள். இவை யனைத்தும் கண்கூடாகக் கண்டதே. நாம் பட்டினத்துப் பிள்ளையாரது அருட்பாடல்களை ஆராய்ந்து அவற்றிற் கூறிய நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகிப், பேரா இயற்கையினைப் பெறுவோமாக.

நக்கீரர் கண்ட அழகன்

அ. நா. ப. திருஞானசம்பந்தன்

முன்னுரை :—சிற்றறிவும் சிறு தொழிலும் படைத்த மக்களினம் பெரும்பாலும் ஆய்ந்து, தெளிந்து தேர்ந்து ஒரு முடிவுக்கு வருவதில்லை. முடிவுகண்ட மெய்ஞ்ஞானிகளை எளனம்செய்யத் தலைப்படுவதற்குப் பெரும்பாலோர் முந்துவர். எந்தச் செயலிலும் விரைந்து முடிவுகாண முற்பட்டுள்ளனர் இற்றைநாளில் அறிஞர்களும். இங்ஙனம் முடிவுகாண்பது செயற்கையே எனினும் இயற்கையென மாறுவேடத்துடன் விளங்குகின்றது. எங்கும் நிறைந்த இறைவன் உயர்ந்தவன் என்பதை ஒருவாறு பலர் தெரிந்துகொண்டிருப்பினும், பலர் தங்கள் பாழ்த்த நிலையினின்றும் சற்றும் மாறாமலே அவனை உருவுடன் காணவும், அவன் அருளைப் பெறவும் விரும்புகின்றனர். பல உயர்ந்த குணங்களின் கடலான பிறப்பறுக்கும் பிஞ்ஞகனைக் காணச் சில நற்குணங்களாவது அவனைக்காணும் அவாவுடையோர்க்கு அமைதல் வேண்டும் அல்லவா? அமைதியும், குணங்களும், நல்ல நினைப்பும் இன்றி அவனைக் காணல் எளிதாமோ? நாகரிகம் கொழுந்துவிட்டு வளர்ந்துள்ளதாக எண்ணும் இற்றை நாளில் அறிவிலா உலுத்தர் சிலர் முருகப்பெருமானுக்கு ஆறு முகங்கள் எதற்கு? பன்னிரு கைகள் எதற்கு? என்ற வினாக்களை எழுப்புகின்றனர். அக்கடவுள் எப்படி அவற்றை எல்லாம் தாங்குகின்றார் என்கின்றனர். இறைவன் எல்லா நேரங்களிலும் உருவுடன் விளங்குவதில்லை. அன்பர்கள் வேண்டி அவனை வழிபட்டு அழைக்கின்றபொழுது, உருவுடன் தோன்றிக் காட்சிதந்து, பின் தான் உருக்கரந்து நிற்கின்றான். இது தெளிந்தோர்கண்ட உண்மை. இனி நக்கீரர் அழகனை எக்கோலத்தில் கண்டு காட்சியை அனுபவித்து நம் எல்லாரையும் அனுபவிக்குமாறு செய்கின்றார் என்பதைக் காண்போம்.

அழகன் தோற்ற நிலை :—நீலக் கடலில் தோன்றும் இளைய செஞ்ஞாயிற்றைக் கண்டு, அதன் வண்ணத்தில் அருளோடு ஈடுபட்டு, முருகப் பெருமானுக்கு ஞாயிற்றினை உவமித்து இன்புறுகின்றார் நக்கீரர். முருகப் பெருமானை எதோ

பார்த்ததாகப் பாவனையில் பேசிச்செல்லாது, தனக்கு முருகப் பெருமான் ஆறு முகங்களுடனும், பன்னிரு கைகளுடனும் தோன்றிக் காட்சிதந்த செய்தியினையும் அம்முகங்களும், கைகளும் இயற்றும் செயல்களையும், அப்பெருமான் எவ்வெவ் விடங்களிலெல்லாம் விளங்குவன் என்பதையும் தெளிவுபடக் கூறுகிறார் நக்கீர தேவர்.

இனி முருகப்பெருமானின் ஆறு முகங்களும் செய்தருளும் தொழில்கள் எவை எனக் காண்போம்.

1. ஒரு முகம் பெருமையாகிய இருளை உடைய உலகம் குற்றமில்லாமல் விளங்கும்பொருட்டுப் பல கிரணங்களையும் தோற்றுவித்தது.

2. ஒரு முகம் அன்பர்கள் துதித்தால் அவர்கள் குற்றங்கள் நீங்குதற்கு உடன்பட்டு, அவர்களுக்கு இனிதாய் நடந்து அவர்கள்பால் கொண்ட விருப்பத்தினாலே மகிழ்ந்து, வேண்டும் வரங்களைக் கொடுத்தது.

3. ஒரு முகம் மந்திரத்தை உடைய வேதத்திற் சொல்லிய முறைமை தவறாத அந்தணர்களுடைய யாகங்களிலே தீங்கு வாராதபடி நினையா நின்றது.

4. ஒரு முகம் வேதாகமங்களிலே மறைந்துகிடக்கும் பொருள்களை இன்பம் பொருந்தும்படித் தேர்ந்து, தெளிந்து போதித்துச் சந்திரனைப்போலத் திசைகள் எல்லாவற்றையும் விளக்கியது.

5. ஒரு முகம் மனத்திலே நிகழ்ந்த சமத்துவத்தை ஒழித்துக், கோபங்கொண்ட உள்ளத்துடனே பகைவர்களாகிய அசுரர்களை வதைத்துப் போர்க்கள வேள்வியை வேட்டது.

6. ஒரு முகம் வேடருடைய திருமகளும், கொடிபோலும் இடையினையுடைய இளம் பெண்ணுமாகிய வள்ளி நாயகியாருடனே மகிழ்ச்சியைப் பொருந்தி நின்றது.

இன்னணம் ஆறுமுகங்கள் நிகழ்த்தும் செயலினை நக்கீரதேவர் கண்டார். கண்டு அடைந்த இன்பத்தில் நம்மையும் திளைக்குமாறு செய்கின்றார். அருள் வெள்ளத்தில் படிந்த தேவர் திருமுன்பு அழகன் தோன்றியதில் வியப்பென்ன ? மருள் வெள்ளத்தில் மயங்கிப் புரள்வார் முன்பு அவன் உருவம் தோன்றுமோ ? எதுக்களால் அவனைச்

சோதிக்க விரும்பும் மருள் உள்ளம் படைத்தோர் முன்னிலையில் அவன் தோன்றுவனோ ?

மாயிருண் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுக
மார்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலினுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுகம்
மந்திர விதியின் மாபுளி வழாஅ
வந்தணர் வேள்வி யோர்க்கும்மே யொருமுகம்
எஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள்போலத் திசைவிளக் கும்மே யொருமுகஞ்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றே யொருமுகங்
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றேயாங்கம்
மூவிரு முகனு முறைநவின் றொழுகலின்

—திருச்சீரலைவாய்.

முருகப் பெருமானின் பன்னிரு கைகளும் என்ன தொழில்கள் செய்து அருளுகின்றன என்பதை நக்கீர தேவர் அருள்வாக்கால் உணர்வோமாக.

1. ஒரு கையானது எக்காலத்தும் ஆகாயத்திலே இயங்கும் முறைமையினையுடைய தேவ இருடிகளுக்குப் பாதுகாவலாக நின்றது.

2. அதற்கு இணையான கை மருங்கிலே வைத்தது.

3. ஒரு கை அங்குசத்தை வைத்திருந்தது.

4. அதற்கு இணையான கை நன்மை பொருந்திய உடையையுடைய தொடையின்மேலே இருந்தது.

5-6. இரண்டு கைகள் அழகிய கேடயத்தையும் வேலாயுதத்தையும் வலமாகச் சுற்றின.

7. முனிபுங்கவர்களுக்குத் தெரியாத பொருள்களை உணர்த்த ஒரு கை மார்புடனே விளங்கியது.

8. அதற்கு இணையான கை மார்பிலே தாழ்ந்த மாலையோடு சேர்ந்து அழகுபெற நின்றது.

9. ஒரு கை தொடையுடனே மேலே சுழன்றது.

10. இன்னொரு கையானது ஓசை இனிதாகிய அசைகின்ற மணியை மாறியொலிக்கப் பண்ணியது.

11. ஒரு கை நீல நிறத்தையுடைய முகிலினாலே மிகுந்த மழையைப் பெய்விக்கச் செய்தது.

12. ஒரு கை தேவப் பெண்களுக்கு மணமாலை சூட்ட அமைந்தது.

“ விண்செலன் மாபினையர்க் கேந்திய தொருகை
யுக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇய தொருகை
யங்குசங் கடாவ வொருகை யிருகை
யையிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப வொருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக்கொட்ப வொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை
நீனிற விசும்பின் மலிதுளிபொழிய வொருகை
வானர மகளிர்க்கு வதுவைசூட்ட வாங்கப்
பன்னிரு கையும் பாற்பட வியற்றி.”

—திருச்சீரலைவாய்.

அழகனின் பன்னிருகைகள் ஆற்றும் தொழில்கள் இவை என்பதை விளக்கமுற நக்கீரர் அருளியதைக் கண்டோம். குன்றுகள்தோறும் ஆடி இன்புறும் முருகப்பெருமான் எவ்வெவ்விடங்களில் தங்குதற்கு உரியன் என்பதை இனிக் காண்பாம்.

ஊர்தோறும் நடைபெறும் சிறப்புப் பொருந்திய திருவிழாவிலும், தமது திருவுள்ளம் விரும்பின இடத்திலும், காட்டிலும், சோலையிலும், அழகுபொருந்திய ஆற்றிடைக் குறையிலும், நதிகளிலும் குளங்களிலும், வேறு பல ஊர்களிலும், நாற்சந்தியிலும், முச்சந்தியிலும், புதுமையாகிய பூக்களையுடைய கடம்ப மரங்களிலும், அம்பலத்திலும், பசு தீண்டு குற்றியையுடைய இடத்திலும் கலியுக வரதன் எழுந்தருளியிருத்தற்கு உரியன் என்பதை அடைவுபடக் கூறி இன்புறுத்துகிறார் செந்தமிழ்ச் செல்வர்.

வாரூர் கொண்ட சீர்கெழு விழவினு
மார்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனுங்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்

—பழமுதிர்சோலை.

முடிபு :—ஆராய்ந்த கேள்வியும் அனுபவமும் உடைய பெருமக்கள் திடீர் என ஒரு முடிவுக்கு வரமாட்டார்கள். ஒன்றைப்பற்றி முடிவு செய்யவேண்டின், பலமுறை தெளிவுறச் சிந்தித்து, அனுபவத்தில் கொணர்ந்து பின்னரே அவர்கள் முடிவைப் பிறர்க்கு அறிவிப்பர். தூயசிந்தனையும், நல்லுறவும் கொண்டவர்கள் சாரமற்ற கேள்விகளை எழுப்பித் தங்களையும், பிறரையும் குழப்பத்தில் ஆழச்செய்யார். பெரியோர்கள் போன போக்கிலே, நாமும் சென்று மேலும் தெளிதலே அறிவுடைமை.

அழகிய வீடொன்றைக் கட்டத் தகுதியான ஆட்கள், தளவாடச் சாமான்கள் இன்ன பிறவெல்லாம் கைவசம் இருப்பின், உரிய நேரத்தில் வேலைகள் தீர்ந்து, வீடும் சிறப்புற அமையும். அதைப்போல வீடுபேற்றை அடைய விரும்புபவர்களுக்கும், பஞ்சேந்திரியங்கள் அடக்கத்துடன் திறம்பட அதனதன் தொழில்களைப் புரியின், எண்ணியபடி எண்ணியதை எளிதில் அடைவர். பஞ்சேந்திரியங்களும் பார்வைக்கு அங்கங்களாகத் திகழின், அதனால் அடையும் பயன் ஒன்றும் இல்லை. இந்திரியங்கள் இறைவன் நமக்கு அளித்தவை என்பதை உணர்ந்து, அவைகளை நல்வழியிற் செலுத்திக் காத்துவந்தால் உறுபயன் வீடெனத் திட்டமாய்ப் பகரலாம். திருமுருகப் பெருமான் பெயரில் கொண்ட அயராதபக்தியே, நக்கீரதேவருக்குத் தன் இறுதியிலும் பெருந்துணையாக இருந்தது. பெருந்துணையைப் பெற ஒவ்வொருவரும் இந்திரிய வழிப்பட்டு நில்லாமல், அதனை நல்வழிப்படுத்தி ஒழுகின் பெருநலம் பெருகும்.

மாங்கனி

கே. நாகரத்தினம், பேருர்க்கல்லூரி

முக்கனிகளிலே முதலில் வைத்து எண்ணப் படுவது மாங்கனியாகும். தித்திக்கும் தேன் மொழி பேசிடும் மங்கையரைக் கரும்பும், தேனும், அமிழ்தும், கனியுமாக ஆக்கிப் புலவர் நாக்கள் அவர்களைப் புகழ்ந்தன. தென்னாட்டில் விளையும் மாங்கனிகள் உலகத்திலே சிறந்தன. பல்வகையான கனிகள், பல்வகையான சுவைகள். குழவி முதல் கிழவி வரை சுவைக்கக் கூடிய கனிகளில் மாங்கனியும் ஒன்று. மாங்கனியை உண்டாக்கியவனுக்கு அதன் வகையும் சுவையும் தெரியும். மரத்தினின்று வீழுமுன் அதனை அவன் சுவைத்துத் தின்னும் முறையும் வேறு. வயிறு நிரம்ப வேண்டும் என்று இரண்டுமூன்று பழங்களைத் தின்று விடுகின்ருன். இவன் குடும்பமும் இப்படியே. ஆனல், அதே பழம் கடைத்தெருவிற்கு வருகின்றது. கூட வரும் குழவி அழுது தொலைக்கின்றதே என்று, அதற்கு ஒன்று வாங்கித் தொலைத்துவிடும் பெற்ருேர்களும் உண்டு. அது சுவைக்கும் முறையே வேறு.

அந்தஸ்து பேதம் இவ்வுலகில் இருப்பதால் அதே பழத்தை மோட்டாரில் சென்று வந்து சேர்த்தித் துண்டுகளாக நறுக்கித் தின்கின்ற செல்வந்தர்கட்கு அதே பழம் வேறு சுவையைத்தான் தரும். புளிப்பு என்று தூக்கி எறிந்த பழத்தை மதுரம் என்று சுவைப்பவர்கள் உண்டு. பன்னெடு நாட்களாகப் பூத்து வரும் மாமரத்தை, வழியில் போகும்போதெல்லாம் பார்த்துச் செல்லும் கவிஞன், அது காய்த்துக் கனியாகும் நாளை எதிர் பார்த்துத்தான் இருப்பான். அவன் அதை அருந்தினல் அதன் சுவை உயர்ந்த நிலையை அடைந்து விடுகின்றது. அதிலும் அருகில் தன் அணங்கும் அன்புற ஊட்டி விட்டாலோ?...

" சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிது " —குறுந்தொகை 18

என்று தோழி இரவுக் குறி வந்து நீங்கும் தலைவனைப் பார்த்து வரைவு கடாவுகின்ருள். இவ்வுவமை பலாக்

கனிக்குக் கூறி இருப்பினும் அதனினும் சுவைமிக்க மாங் கனிக்கு இயைத்துப் பொருள் கண்டால் சிறக்கும். பாது காப்பில்லாச் சிறியதொரு கொம்பிலே பெரியதொரு கனி விரைவில் உகும். அல்லது கள்வர் கவர்ந்து செல்லினும் செல்வர். அதுபோல வேற்று வரைவினின்றும் பாதுகாப் போர் இல்லாத தலைவியது உயிர் சிறிது. காமம் பெரிது. எனவே இவள் உயிர் விடுதல் கூடும். அல்லது பிறர் வரைந்து கொள்ளினும் கொள்வர் என, உவமை அழகுற விரிந்து செல்கின்றது.

உலகத்தாரால் மிக மென்மை என்று ஓதப்பட்ட அனிச்ச மலரும், அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம் என்றார் வள்ளுவர். தலைமகன் கூற்றாக, மாதர் தம் கரும்பினைப்போல இருப்பினும் மாங்கனியின் சுவை தாழ்ந் தது என்றெல்லாம் கவிஞர்கள் கூறுகின்றார்கள். சுவைக் கின்றோம்.

மாங்கனியைப்பற்றிப் பெரியபுராண வாயிலாகவும் அறிகின்றோம்: மடவாராகிய காரைக்கால் அம்மையாருக் காகவே தயாரிக்கப்பட்டது மாங்கனி என்று கூறலாம். அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை: அதிலும் கற்பு என்னும் இன்மையால் தன்னையும் தன்னைக் கொண்டானை யும் பேணினால் வாராத தொன்று உண்டோ?

“பத்தினி யில்லோர் பலவறம் செய்யினும்
புத்தேள் உலகம் பெறுஅர் என்பது” —மணி. 11; 117-118

என்று சாத்தனார் கூறுவதும், ‘சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர் நிறை காக்கும் காப்பே தலை’ என்று வள்ளுவர் கூறுவதும் காண்க.

“அறம் எனப்படுவது, மன்னுயிர்க் கெல்லாம் உண்டி யும், உடையும், உறையுளும் அல்லது கண்டது இல்” என் னும் மணிமேகலை வாயிலாகவும், “நீரின்றமையா யாக் கைக் கெல்லாம்,

உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே”

என்று புறநானூற்றில் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் அறிவுறுத்தும் வாயிலாக அறிகிறோம்.

பரமதத்தன் வரவிடுத்த மாங்கனிகள் இரண்டில், "விடையவன் தன் அடியாரே பெறலரிய விருந்தானால் பேறிதன்மே லில்லை" என எண்ணிப் புனிதவதியார் பரமன் அடியாருக்கு ஒன்றினை ஈந்து அமுது செய்வித் தனுப்பினார். பின்னர் மனைப்புகுந்த பரமதத்தனுக்கு அமுது செய்து மீதி இருந்த ஒரு மாங்கனியைப் படைத்தார். அவன், அதனைச் சுவைத்து வியந்து, 'மற்றுமோர் கனியினையும் இடுக' என்றான். எடுத்து வருவார்போல் அகன்ற புனிதவதியார் மற்றுமோர் மாங்கனிக்கு என்செய்வார்? சிவபிரான் அருளால் ஓர் அதிமதுர மாங்கனி வந்து எய்தியது. அதனைக் கணவர்க்குக் கற்புடைய மடவார் மகிழ்ந்து கடப்பாட்டில் ஊட்டினார். 'அமுதினும் சுவைமிக்க அக்கனி எங்கே கிடைத்தது?' என்று வணிகன் கேட்டான். 'செய்தபடி சொல்லுவதே கடன்' என்று புனிதவதியார் கூறக் கேட்ட வணிகன் தெளியானாகி 'தேசுடைச் சடைப் பெருமான் திருவருளால் இன்னமும் ஓர் மாங்கனி அவன் அருளால் அழைத்தளிப்பாய்' என்றான். புனிதவதியார் சிவபிரானைப் பரவி 'ஈங்கிம் மாங்கனி அளித்தருளீரேல் எனது உரை பொய்யாம்' என்று கூற, அவன் அருளால் மாங்கனி ஒன்று வந்து எய்தியது கண்டு அதிசயித்து வாங்கியதும், பின்னர்த் தன் கைப்புக்க மாங்கனியினைக் காணாத வணிகன் அச்சம் மேற்கொள்ள, உள்ளமும் தடுமாறெய்தி அப்புனிதவதியாரை வேறோர் அணங்கு எனக்கருதி நீங்கும் துணிவினை மேற்கொண்டான். பின்னர் வேறோர் மணம் பூண்டு, "யான் உமதருளால் வாழ்வேன்; நான் பெற்ற இக்குழவிதானும் பான்மையால் உமது நாமம்" என்று கணவன் பணிந்து வீழக்கண்ட புனிதவதியார் அச்சத்தால் ஒதுங்கினாள். 'மனைவியை வணங்குவதேன்?' எனக் கேட்டார்க்கு, "மானுடம் இவர்தாம் அல்லர்; நற்பெருந் தெய்வமாதல் நானறிந்தகன்ற பின்பு பெற்ற இம்மகவு தன்னைப் பேரிட்டேன் ஆதலாலே பொற்பதம் பணிந்தேன் நீரும் போற்றுதல் செய்மின்" என்றான்.

இதைக் கேட்டதும், தன் கணவனுக்காகத் தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்து, "உன் தாள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்கு வேண்டும்" என்று இறைவனைப் புனிதவதி வேண்டினார்.

இறைவன் அருள் புரிந்தார். பின் கைலைவெற்பில் தலையினால் நடந்து எதிர்வரக்கண்ட அன்பின் அதிசயத்தைக் கேட்ட உமையம்மைக்கு 'நம்மைப்பேணும் அம்மை' எனச் சிவபிரான் அருளினர். அப்புனிதவதியாரே காரைக்கால் அம்மையாராவர்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்,
'பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னைஎன்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க' என்றார்.

சிவஞானபோதத் தெளிபொருட் சுருக்கம்

பேராசிரியர் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்

(முற்றொடர்ச்சி : மலர் 29 ; இதழ் 8, பக்கம் 358)

நான்காம் சூத்திரம்

ஒரு பொருளின் உண்மையைப் பிரமாணம் இலக்கணம் என்னும் இரண்டு வகையானும் அறிதல் வேண்டு மாகலின், முதல் மூன்று சூத்திரங்களிற் பிரமாணத்தாற் பெறுவித்த பதி பாச பசுக்களை எதிர்நிரல்நிறையாக வைத்து, இனி வரும் நான்கு ஐந்து ஆறும் சூத்திரங்களில் இலக்கணத்தாற் பெறுவிக்கின்றமையின், இப்பகுதி 'இலக்கண இயல்' என்னும் பெயர் பெறும்.

" அந்தக் கரணம் அவற்றின்ஒன் றன்று;அவை
சந்தித்தது, ஆன்மாச் சகசமலத் துணராது ;
அமைச்சுஅரசு ஏய்ப்பநின்று, அஞ்சுஅவத் தைத்தே!'.

என்பது சிவஞானபோதத்தின் நான்காம் சூத்திரம். உத்தேசத்தின் பின் இலக்கணம் கூறுதல் முறைமை யாகலின், மேலைச் சூத்திரத்தின் 'ஆன்மா உளது' என்று உத்தேசமாய் எடுத்துக் கொண்ட ஆசிரியர், ஈண்டு அதன் இலக்கணம் கூறத் தலைப்படுகின்றார். மேற்சூத்திரத்தின் ஆன்மாவின் உண்மை கூறுதற் பொருட்டுத் தொகுத் தோதிய அஞ்சவத்தைகள், ஈண்டு ஆன்மாவின் இலக்கணம் கூறும் முகத்தான் விரித்தோதப்படுதலான், மேலைச் சூத் திரப் பொருளோடு இச்சூத்திரத்தின் பொருளை "இதுவும் அது" என்று ஆசிரியர் மாட்டெறிந்து கூறினர்.

ஆன்மா அந்தக் கரணங்களாகிய மனம் புத்தி அகங் காரம் சித்தம் என்னும் நான்கனுள் ஒன்றன்று; ஆயினும், நுண்ணுணர்வு இன்மையினல் சூழ்ச்சித் துணைவராகிய அமைச்சர்களோடு கூடிநின்று அரசன் தன் தொழில் நடத்துதல்போல, சகச மலம் எனப்படும் ஆணவ மலத்தாற் பிணிப்புண்டு கிடக்கும் ஆன்மா, தனக்குச் சூழ்ச்சித் துணை யாகிய அந்தக்கரணங்களோடு கூடிநின்று, அவற்றின் துணையால் சிறப்புணர்வு நிகழப்பெறுகின்றது; இங்ஙனம் அமைச்சரோடு கூடிய அரசனைப்போல, அந்தக்கரணங் களோடு கூடி நின்று ஆன்மா இயங்கி வருதலால், அது சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என் னும் ஐந்து அவத்தைகளை உடையதாயிற்று - என்பது இந் நான்காம் சூத்திரத்தின் பொருள்!

ஆன்மா என்னும் சொல், வியாபகம் எனவும் சித்த சித்து எனவும் இரு பொருள்படும். அமைச்சரசு ஏய்ப்ப அந்தக்கரணங்களோடு கூடி நிற்றலால், ஐந்தவத்தைப் படுதல் ஆன்மாவிற்கு இலக்கணம் என்பதனை ஆசிரியர் இந் நான்காம் சூத்திரத்தாற் பெறுவித்தார்.

அந்தக்கரணங்கள் ஒவ்வொன்றனையும் ஒவ்வோர் அமையத்து ஆன்மா எனக் கூறுதல் கொண்டும், "மனமும் புத்தி அகங்காரம் சித்தம் நான்கும் மருவி ஆன்மாவே என்ன வரும்" என்பது கொண்டும், அந்தக்கரணங்களையே சித்தாகிய ஆன்மா எனச் சிலர் கருதி மயங்குவர். அந்தக்

காணன்மவாதிகள் எனப்படும் அவர்களின் பிழைபட்ட அக்கருத்தினை "அவைதாம் பிரகாசமாய் நின்றே அப்பிரகாசமாய் நிற்றலான்" என்னும் ஏதுவால் ஆசிரியர் மறுத்துரைத்துத் தெளிவுபடுத்துகின்றார். பிரகாசம் அப்பிரகாசம் என்பன அறிவு அறிவின்மை என்னும் பொருளில் வந்தன. சித்தம் சிந்தித்தறியும், யான் சிந்தித்தேன் என்று அறிய மாட்டாது; மனம் பொருள்களைச் சங்கற்ப விகற்பம் செய்தறியும், யான் சங்கற்ப விகற்பம் செய்தேன் என்று அறியாது; அகங்காரம் ஒன்றை இன்னதெனத் துணிவேன் யான் என்று ஒருப்பட்டெழுந்து அறியும், யான் ஒருப்பட்டெழுந்தேன் என்று உணராது; புத்தி இன்னது இது எனப் பொருள்களை நிச்சயித்தறியும், யான் நிச்சயித்தேன் என்று தெளியாது. ஆகலான், அந்தக்கரணங்களோடு கூடி யான் சிந்தித்தேன், பற்றினேன், எழுந்திருந்தேன், நிச்சயித்தேன் என்று அறிந்தும்; இது சுகம், இது துக்கம், இது மோகம் என்று அறிந்தும்; யான் சுகித்தேன் துக்கித்தேன் மோகித்தேன் என்று அறிந்தும், பிறவற்றை நோக்கியும் தன்னை நோக்கியும் அறிவுடைய சித்துப் பொருளாக நிற்கும் ஆன்மா, தம்மை நோக்கிச் சித்துப் பொருளாகாத அந்தக்கரணங்களின் வேறுபட்டது எனவே துணியப்படும் என்பது, மேலை ஏது மொழியின் கருத்தாகும். அரசனுக்கு அணுக்காரதற் சிறப்புப் பற்றி அமைச்சரை அரசர் என்று ஒரோவழி உபசரித்துக் கூறப்படுமாறு போலப், புறக்கருவிகளை நோக்கி ஆன்மாவுக்கு அணுக்கமாய் நிற்கும் சிறப்புப் பற்றி, "மனமும் புத்தி அகங்காரம் சித்தம் நான்கும் மருவி ஆன்மா என்ன" உபசரித்துக் கூறப்பட்டன. இவ்வுண்மை யறியாது அந்தக்கரணங்களையே ஆன்மா என மயங்கற்க என்பது.

ஐம்புலன்கள் மனம் முதலிய அந்தக்கரணங்களின் சார்பால் பொருள்களை உணரும். அந்தக்கரணங்கள் உயிரின் சார்பால் அறிவுநிலை அடையும். ஐம்பொறிகளின் வாயிலாக அறிவது வாயிற்காட்சி. பின் மனத்தில் தோன்றுவது மானதக் காட்சி. அதன்பின் புத்தியில் தோன்றுவது தன் வேதனைக் காட்சி. இவை யாவும் கடலிடை எழுந்து கரைசாரும் திரைபோல ஆன்மாவின் மாட்டுப் பரம்பரையின்

வந்து தோன்றும். வாயிற் காட்சியாற் கண்ட பொருள்களை உணரும் மானதக் காட்சியின் கண்ணும், ஒரு பெற்றித்தாதலின்றிச் சித்தமாய்ச் சிந்தித்தும், மனமாய்ப் பந்தித்தும், அகங்காரமாய்த் தெளிவு பிறவாது எழுந்தும், புத்தியாய்த் தெளிந்தும் வெவ்வேறாகவே உணர்தலான், அவ்வாறு உணரும் புருடனாகிய ஆன்மா, ஞாயிறு முதலிய வற்றோடு கூடிநின்று நாழிகை நாள் பக்கம் திங்கள் யாண்டு முதலியனவாய்ப் பாகுபாடு செய்யப்படும் கால தத்துவம் அஞ்ஞாயிறு முதலியவற்றின் வேறாயினாற் போல, அந்தக்கரணங்களினின்றும் வேறுவதேயாம். இங்ஙனம் வேறு வேறாய அந்தக்கரணங்களையும் ஆன்மாவையும் வைகரி முதலிய வாக்குகள் ஐந்தும், அகாரம் முதலிய பஞ்ச கலை வடிவினவாய் நின்று, ஒரோவொன்று ஒரோவொரு கருவிகளைச் செலுத்தி உடன் நிற்கும். மானதக் காட்சியின் நிகழும் சவிகற்ப உணர்விற்கு ஏதுவாய் அகரம் அகங்காரத்தையும், உகரம் புத்தியினையும், மகரம் மனத்தினையும், விந்து சித்தத்தினையும், நாதம் உயிரினையும் உடனின்று செலுத்தி நிற்கும் என்பது ஈண்டு அறியற் பாலது.

அகார உகாரம், அகங்காரம் புத்தி ;
மகாரம் மனம் ;சித்தம் விந்து ;—பகாதுஇவற்றை,
நாதம் உளவடிவாம் ; நாடிற் பிரணவம்,ஆம் ;
போதம் கடற்றிரையே போன்று !

இங்ஙனம் அந்தக்கரணங்களை அதிட்டித்து நின்று, கணந்தோறும் நினைப்பும் மறப்பும் ஆகிய சகல கேவலங்கள் கடற்றிரையே போன்று மாறி மாறித் தோன்றுமாறு செய்துவரும் அக்கரங்கள் தாமும் சடமாகலின், அவற்றை அதிட்டித்து நின்று இயக்கும் அதிதெய்வங்கள் உள என்பதும் ஈண்டு உணரற்பாலதாகும்.

“எண்ணிலவு ஓங்காரத்து, ஈசர், சதாசிவமாம்
நண்ணிய விந்துவொடு நாதத்துக் ;—கண்ணிற்
பகர்அயன்,மா லோடு, பரமன் அதிதெய்வம்
அகர,உக ரம்,மகாத் தாம் !”

என்னும் ஆசிரியர் திருமொழியால், மானதக் காட்சியின் கண் நிலவிய பிரணவத்தின்கண் உள்ள நாதத்திற்குச் சதா சிவரும், விந்துவிற்கு மகேசுவரரும், மகரத்திற்கு உருத்திரரும், உகரத்திற்குத் திருமாலும், அகரத்திற்குப் பிரமனும் அதிதெய்வங்களாக அதிட்டித்து நின்று இயக்குவர் என்பது பெறப்படும். இதனாலேயே கடலின்கண் புதிது புதிதாய்த் திரைகள் தோன்றியும் ஒடுங்கியும் வருமாறு போல, உயிர்கள்பாற் கணந்தொறும் உணர்வுகள் உதித்தும் ஒடுங்கியும் போதருகின்றன. கடற்றிரை யுவமை, உணர்வுகள் பரம்பரையாய் வருதற்கும், புதிது புதிதாய் வருதற்கும் முறையே இருமுறை காட்டப்பெற்றது; கூறியது கூறல் என்று கருதற்க.

இனி, ஆன்மா அந்தக்கரணங்களின் ஒன்றன்றாயின், அவற்றோடு சந்தித்து நிற்றற்கு ஏதுவென்னை என ஐயம் நிகழ்தல் இயல்பு. ஆன்மாவானது இறைவனைப் போன்ற சேதனப் பொருளாய் அந்தக்கரணங்கள் முதலியவற்றின் வேறாயதெனினும், நெல்லிற் குமியும் நிகழ் செம்பினிற் களிம்பும் போல வேறு காரணமின்றி, மூலமலம் என்பதொன்று தன்னொடு கலந்து ஞான திரோதகமாய் மறைத்துக் கோடு நிற்றலின், தன்னியல்பாற் பொருள்களை உணருமாறு இன்றி, அந்தக்கரணம் முதலிய கருவிகளைக் கூடிநின்று உணர வேண்டுவதாயிற்று. அநாதியே மலத்தின் நீங்குதல் முதல்வனின் இயல்பாதல் போல, அநாதியே மலத்தைப் பற்றி நிற்றல் உயிரின் இயல்பு என்பது சிவாகமங்களுக்கெல்லாம் ஒப்பமுடிந்ததொன்று. ஆணவமலமானது உயிர்களை அநாதியே பற்றி நிற்றலை "அதுவதுவாய் வீயாத வன்னி தனைத் தன்னுள் மறைந்தோன்றும் காட்டம்போல், தன்னை மலம் அன்று அணைதல் தான்" என்று ஆசிரியர் விளக்குகின்றார். விறகினுள் நெருப்பு மறைந்து விரவி நிற்றல் போல, உயிர்களின்பால் ஆணவமலம் மறைந்து இரண்டற விரவி நிற்கின்றது என்பது கருத்து. எனவே, இதனால் "மலந்துள தாம்" என முதற் சூத்திரத்துட் சுட்டிய மூலமலத்திற்கு ஈண்டு இலக்கணம் கூறியவாறாயிற்று.

"ஒன்றதாய், அனேக சத்தி உடையதாய், உடனாய், ஆதி
அன்றதாய், ஆன்மா வின்றன் அறிவொடு தொழிலை ஆர்த்து

நின்று,போத் திருத்துவத்தை நிகழ்த்திச்,செம்பினிற்களிம்பேய்ந்து,
என்றும்அந் ஞானம் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே!"

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுளால் ஆணவமலம் இனையதென உணரலாம். ஆன்மாக்களுடன் அநாதியே சகசமாய்க் கலந்து நின்று அவை கருவிகளோடு கூடாத கேவல நிலையில் அவற்றிற்கு அறியாமையை விளைத்து நிற்றல் ஆணவமலத்திற்குத் தன்னியல்பு (சொரூப லட்சணம்); ஆன்மாக்கள் கருவிகளோடு கூடிய சகல நிலையில் விபரீத உணர்வை விளைவித்து ஐந்தவத்தைகளை அடைவித்தல் அதற்குப் பொதுவியல்பு (தடத்த லட்சணம்). எனவே, ஆணவ மலத்தின் இருவகை இலக்கணமும் ஈண்டுக் கூறப்பட்டன.

இனி, ஆன்மாக்களின் அறிவை மறைத்தற்கு மாயா மலமாகிய ஆகந்துக (இடையில் வரும்) மலமே ஞான திரோதகமாதல் அமையும், வேறுமோர் ஆணவம் என்னும் மூலமலம் உண்டென்றல் எற்றுக்கு? எனச் சிலர் வினவுவர். "மாயா தனுவிளக்கா மற்றுள்ளம் காணுதேல் ஆயாதாம் ஒன்றை" ஆதலின் பொருள்களை அறியும் வண்ணம் உயிர்கட்கு அறிவை விளக்குதல் மாயையின் செய்தி; அவ்வறிவைத் தடைசெய்துகொண்டு நிற்றல் ஆணவத்தின் செய்தி. இவ்வாற்ருல் ஆணவமலமும் மாயாமலமும் தம்முள் இருளும் ஒளியும்போல இகலிநிற்பனவாம். உயிரின் அறிவைச் சுட்டுப் பொருள்களில் அழுந்தச்செய்து, அவற்ருல் நில்லாதனவற்றை நிலையின என்றுணரச் செய்தல்பற்றி "மாயை மயக்கமும் செய்யுமன்றே" எனக் கூறப்பெற்றதாயினும், அஃது ஆணவ மலம்போல முற்றிலும் அறியாமையை விளைவித்து நிற்றல் இல்லை என்பது கடைப்பிடிக்க. எனவே, உயிர்களுக்கு அறிவை விளக்கும் கருவிகளாய் இடையே வந்து சேர்ந்துதவும் மாயாமலத்தின் வேருக, அநாதியே உயிர்களைப் பற்றி நின்று அறியாமை விளைத்துவரும் ஆணவ மலம் வேறுண்டு என்பது தெளிவு.

இனி, இருளின் அகப்பட்ட கண் விளக்கோடு கூடிய வழிப் பொருள்களைக் காண்டலேயன்றி வேறுவேறு அவத்தைகளைப் படுமாறு இல்லை; அதுபோல மலத்தில் அகப்பட்ட உயிர் கருவிகளோடு சந்தித்த வழி ஒரு தன்மையாய்

அறிதலே அமைவுடைத்து ; அவ்வாறின்றி ஐம்புலன் அறிந்தும், ஒடுக்கம் அறிந்தும், உண்டிவினை இன்றிக் கிடந்தும், உணர்த்த உணர்ந்தும், இங்ஙனம் வெவ்வேறு அவத்தைப் படுவது எற்றுக்கு? என்னும் வினா நிகழ்த்தப்படும். அமைச்சரோடு கூடிநின்று தன் காரியஞ்செய்யும் அரசன் வேறு வேறு அவத்தைகளை யுடையனாதல் போல, அந்தக்கரணங்களோடு கூடிய ஆன்மாவும் அஞ்சவத்தை யுறுவதாயிற்று. இதனையே,

"படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போது, இல்லிற்
கடைதொறும் விட்டு விட்டுக், காவலும் இட்டுப், பின்னர்
அடைதரும் தனியே அந்தப் புரத்தினில்; அதுபோல், ஆன்மா
உடலினின் அந்ரா வந்தை உறும்,உயிர் காவல் ஆக !"

எனப் போதரும் சிவஞான சித்தியார் செய்யுள் அழகுற விளக்குதல் காணலாம். எனவே, கருவிகளோடு கூடி நின்று ஐந்தவத்தையுறுதல் உயிரின் இலக்கணம் என்றுணர்க. ஆன்மா வியாபகமாயினும் அருவமாகிய தத்துவங்கள் செயற்படும் முறையின் வேறுபாடுபற்றி அவத்தையுறுதல் சாலும் என்று வற்புறுத்துதற்கு, " அதுதான் மலரோருபத்தின் மறைந்து அருப சொருபியாய் நிற்றலான் " என ஆசிரியர் எதுக்கூறி விளக்கியருளினர். அவத்தை நிலைதோறும் கூடும் வெவ்வேறு கருவிகளினும் ஆன்மா முழுவதும் வியாபித்து நிற்றலின், அவத்தை நிலைகளால் ஆன்மாவின் வியாபகத் தன்மைக்கு இழுக்கில்லை என்பது இதனால் தெருட்டப் பட்டது.

ஐந்தவத்தைகளாவன: சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்பன. இவற்றை நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம் எனவும் கூறுப. ஆன்மா ஐந்தவத்தை யுறுதற்குக் காரணம் தத்துவங்களின் தொழிற்பாடேயாம். அத்தொழிற்பாட்டின்கண் கருவிகள் எல்லாவற்றோடும் கூடிய உயிரின்பால், தூலம் சூக்குமம் என்னும் இருவகைப் பூதங்களும், அவற்றின் கூறுகிய தாத்துவிகங்களும், தமது சத்திமடங்கித் தொழிற்படாது விணக்கீடாக நிற்கும் அளவில் பொறிகளின் தொழிற்பாடு மெத்தென நிகழும்; அதுபோது கண்டும் காணாது, கேட்டும்

கேளாது, தீண்டியும் தீண்டாது, சுவைத்தும் சுவையாது, மூன்றும் மூலாது நிற்கும் நிலை சாக்கிரம். இவ்வவத்தை யில் ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும், சத்தப் பரிச ரூப ரச கந்தம் என்னும் தன்மாத்திரை ஐந் தும், வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் என் னும் வசனாதி ஐந்தும், அந்தக்கரணம் நான்கும், புருடனும், வாயுக்கள் பத்தும் ஆகக் கருவிகள் முப்பத்தைந்தும் தொழிற்படும். இதற்குத் தானம் புருவநடு.

இனிப், பொறிகளும் தமது சத்திமடங்கி, அவை மடங் கவே அவற்றின் வழியவாகிய வாக்காதிகளும் தமது சத்தி மடங்கி, அவ்விருவகைப் பொறிகளும் தொழிற்பாடு இன்றி ஆண்டு நின்றொழியும் அவத்தையின், ஏனை அந்தக்கரணம் முதலியன தொழிற்படினும் புறப்பொருள் விடயமாகாமை யின், அகத்தே சூக்கும தேகத்தோடு நின்று, ஆண்டைக் குரிய இருவினைப் பயன்களை நுகர்ந்து நிற்கும் அவத்தை சொப்பனம். இதற்குத் தானம் கண்டம். இதில் ஞானேந் திரியங்களும் கன்மேந்திரியங்களும் தொழிற்படாமையின், இங்குத் தொழிற்படுவன ஏனைய இருபத்தைந்துமேயாம்.

இனி, அந்தக்கரணங்களும் தமது சத்திமடங்கிச் செய லற்ற வழி, அவை விடயத்திற் கேதுவாகிய வசனாதி சத் தாதி விடயங்களும், பிராணன் ஒழித்து ஒழிந்த வாயுக் களும், அவற்றோடு செயலற்று நின்றொழிய, மனத்தின் விருத்தியாகிய சித்தமும், ஆண்டு நிகழும் அவத்தைக்குரிய ஆற்றல் மாத்திரைக்கும், உடம்பிற்குக் காவலாதல் மாத் திரைக்கும் ஏதுவாய், அகங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணவாயுவும், அவற்றோடு கூடி விடயிப்பதாகிய புருடனு மாகிய மூன்று கருவிகளும் கூடித் தொழிற்படும் அவத்தை யில், நிச்சயித்தற் கேதுவாகிய புத்தி தத்துவம் முதலாயின தொழிற்படாமையான் நனவின்கண் அறிய வாராததாய், ஒன்றனைத் தூக்கிச் சிந்தித்து நிற்கும் அவத்தை சுழுந்தி. இதற்குத் தானம் இதயம்.

சித்தமும் தனது சத்தி மடங்கிச் செயலற்றொழியும் அவத்தையின் ஆங்காரத்தான் இயக்கப்படும் பிராணவாயு வும், புருடனும் என்னும் இரண்டு கருவியும் கூடி, உடம்பிற்

குக் காவலாய தன்னையே விடயிக்கும் அவத்தை துரியம். இதற்குத் தானம் உந்தி.

ஆங்காரம் பிராணவாயுவை இயக்குதற்கண் உளதாகிய சத்தி மடங்கிச் செயலற்றொழிதலின், பிராணவாயுவும் செயலற்றொழியும் அவத்தையிற் பஞ்சகஞ்சுகன் ஆகிய புருடன் ஒன்று மட்டும், தன்னின் நீங்காத மூலப்பகுதியோடு கூடி, அவிச்சை மாத்திரையை விடயித்துநிற்கும் அவத்தை துரியாதீதம். இதற்குத் தானம் மூலாதாரம்.

சாக்கிர (நனவு) நிலையில் ஆன்மா புருவ நடுவின்கண் மேற்கூறிய முப்பத்தைந்து கருவிகளுடன் கூடிநிற்கும். அங்ஙனம் நிற்கும் ஆன்மா, கன்மேந்திரியம் ஐந்தும் ஞானேந்திரியம் ஐந்தும் ஆகிய இந்திரியங்கள் பத்தும் நீங்க எஞ்சி நின்ற இருபத்தைந்து கருவிகளுடன், சொப்பன (கனவு) நிலையில் கீழிறங்கிக் கழுத்திற்குப் போதரும்; பின்பு அங்குநின்றிழிந்து சித்தம் பிராணவாயு புருடன் என்னும் மூன்று கருவிகளுடன், சுழுத்தி (உறக்க) நிலையில் இதயத்தினை அடையும்; பின்னர் அங்கு நின்றும் பெயர்ந்து பிராணவாயுவும் புருடனுமாகிய இரண்டு கருவிகளுடன் துரிய (பேருறக்க) நிலையில் உந்தியைச்சாரும்; அதன் பின்னர் மேலும் அங்கிருந்து பெயர்ந்து துரியாதீத (உயிர்ப் படக்க) நிலையில், தான்மட்டுமே தனித்துநின்று மூலப்பகுதியோடு கூடி அறியாமையைப்பற்றி நுகர்ந்திருக்கும். இவ்வாறு ஆன்மா புருவநடுவினின்று கீழ் இறங்கிப் படிமுறையே கருவிகளைப் பிரிந்து பிரிந்து சென்று மூலாதாரத்தை அடைவது கீழால் அவத்தை எனவும், மூலாதாரத்தினின்று மீண்டு முன்னர்ப்போந்த முறையே ஆங்காங்குக் கருவிகளோடு கூடிக் கூடிப் புருவ நடுவைச் சேர்வது மேலால் அவத்தை எனவும் கூறப்படும். கீழாலவத்தை உறக்கத்துக்குச் செல்லும் நிலையும், மேலாலவத்தை உறக்கத்தினின்று எழும் நிலையுமாம். கீழ்நோக்கிச் செல்லுங்காலத்தும் மேல்நோக்கிச் செல்லுங் காலத்தும் இலாடம் என்னும் புருவ நடுவின்கண் சாக்கிராவத்தை நிகழுமாயினும், மேலாலவத்தைச் சாக்கிரம் பொருள்களை யுணர்த்துமேயன்றிக் கீழாலவத்தைச் சாக்கிரம் பொருள்களை உணர்த்தாது. ஆதலின் கீழாலவத்தை மேனோக்கிப் பிறவிக்குக் காரணமாம் எனவும், மேலா

லவத்தை, 'பெருக மேல்நோக்கித் தீய பிறப்பறுத்திடும்' எனவும் கூறுவர்.

சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் இவ்வவத்தை ஐந்தும் காரியாவத்தை எனப்படும். கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூவகை நிலைகளும் உயிர்க்குக் காரணாவத்தை எனப்படும். உயிர் ஆணவமலத்தோடு கூடி நிற்பது கேவலநிலை; மாயா கருவிகளோடு கூடிநிற்பது சகலநிலை; மலத்தின்நீங்கி இறைவனோடு கலந்து நிற்பது சுத்தநிலை. கேவல நிலையில் மல மறைப்பால் உயிர்கள் எதனையும் உணரமாட்டா; சகலநிலையில் உயிர்கள் கருவிகளின் துணையால் உலகினை உணரும்; சுத்த நிலையில் உயிர்கள் இறைவனொடு கலந்து இறையின்பம் நுகரும். கேவலம் சகலம் சுத்தம் என்னும் இம்மூன்றினும் தனித்தனியே சாக்கிரம் முதலிய ஐந்தவத்தைகளும் நிகழும். நிகழின் அவற்றைக் கேவல சாக்கிரம், சகல சாக்கிரம், நின்மல சாக்கிரம் என்பன முதலாக முறையே கூறுவர். இங்ஙனம் ஆன்மா பற்பல அவத்தைகளையும் அடைதல் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களினாலேயாம். மும்மலங்களினின்றும் அறவே நீங்கியவழிப் பிறந்திறத்தலும் ஐந்தவத்தைப் படுதலும் இல்லையாய்ச் சிவத்தோடு இரண்டறக் கலந்தின்புற்று நிற்கும்.

"கேவல சகல சுத்தம் என்றுமூன் றவத்தை, ஆன்மா
மேவுவன்; கேவ லம்,தன் னுண்மை ;மெய் பொறிகள் எல்லாம்
காவலன் கொடுத்த போது சகலனும்; மலங்கள் எல்லாம்
ஓவின போது சுத்தம் உடையன்,உற் பவம்து டைத்தே!"

"சாக்கிரம் முப்பத் தைந்து நுதலினில்; கனவு தன்னில்
ஆக்கிய இருபத் தைந்து களத்தினில்; சுழுனை மூன்று
நீக்கிய இதயம் தன்னில்; துரியத்தில் இரண்டு நாபி;
நோக்கிய துரியா தீதம் நவலின்,மூ லத்தின் ஒன்றே!"

—முருகவேள்

தெய்வபக்தியும், பொதுநலத் தரும வாழ்க்கையும்*

வாழ்க்கைக்குப் பலவகை உதவிகள் கிடைத்தபோதிலும், தெய்வ உதவி மிகப்பெரிய அளவில் தேவைப்படுகிறது. தெய்வ உதவியின் அவசியத்தை நன்கு அறிபவர்கள், தெய்வபலமே உலகநலப் பாதுகாப்பிற்கு மூலாதார பலம் என்று காண்கின்றனர். அதனுல் எந்தநலக் காரியங்களையும் துவக்குமுன், தெய்வத்தைவழிபட்டுத் தெய்வீக நிட ஆரோக்கிய ஆறுதல்களுடன் துவக்குகின்றனர். தெய்வீக நலன்களுடன் சித்திபெற்று இனிது வாழ்கின்றனர்.

தேசநல வளர்ச்சிக்குத் தேசபக்தி அவசியமாதல் போலவே, தெய்வபக்தியும் அவசியமாயிருப்பதால், தேசபக்தியுடன் தெய்வ பக்தியையும் குறையாமல் வளர்த்தல் வேண்டப்படுகிறது.

தெய்வபக்தி குறையும்போதெல்லாம் உலகில் பல கஷ்ட நஷ்டங்கள் தோன்றுகின்றன. தெய்வபக்தி வளர்ச்சியடையும்போதெல்லாம் உலகில் நிம்மதியும் சுபிக்ஷங்களும் வளருகின்றன. இவற்ருல் தெய்வபக்தியின் பயன்களையும் அவசியத்தையும் நன்கறிகிருேம்.

ஆயுள், ஆரோக்கிய நலன்களைத் தேடுதற்குத் தானியங்களும், பாலும், நீரும், பழச்சத்துக்களும், காற்றும் இன்றியமையாதனபோலவே, தெய்வ தியான இன்ப இரசச் சத்துக்களும் தேவைப்படுகின்றன. நன்ருகப் பரிசீலித்துப் பார்ப்பவர்கள், தெய்வழிபாட்டு இன்பச் சத்துக்கள் முதல்தர போஷாக்குச் சத்துக்களை அளித்துக் காக்கின்றன என்று அறிகின்றனர். ஆகவே அவற்றைத் 'தேவாமிருதம்' 'ஞானசஞ்சீவி' 'அமிர்தசஞ்சீவி' 'ஆனந்த மாமழை' என்று போற்றுகின்றனர்.

---

*சென்னை, அடியார் மன்றத்தில் 18-8-56-ல் சிவஞர் ஸ்ரீமத் தெய்வானந்தா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுச் சுருக்கம்.

பலவகையிலும் தேசநலனுக்கு மாதுர்பக்தி, பிதுர்பக்தி, குருபக்தி, தேசபக்தி, தெய்வபக்தி முதலிய பக்திகள் இன்றியமையாதனவாயிருப்பதால், கிடைத்தற்கரிய பக்திகளைச் சிரிய முறையில் வளர்ப்பதற்கு உறுதி பூண்போமாக!

இறைவர் அருள்செய்யப் பிரார்த்திப்போமாக !

கீவளூர் தெய்வானந்த ஆஸ்ரமம் தெய்வானந்த முனிவர் ஞானயோக சித்தர், சன்மார்க்க சிக்ஷக அன்பர், சுவாமி நடராஜா என்று அழைக்கப்பெறும் ஸ்ரீமத் தெய்வானந்தா அவர்கள் அடியார் மன்றத்தில் மேற்கண்ட அரிய சொற்பொழிவாற்றினார்கள்.

கூட்டத்தில் சிதம்பரம் அண்ணாமலை யுனிவர்ஸிடி முன்னாள் ரிஜிஸ்ட்ரார் ஸ்ரீமத் S. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும், சைவசித்தாந்த மகாசமாஜத் தலைவர் ஸ்ரீ A. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும் மற்றும் பல அன்பர்களும் கலந்துகொண்டனர்.

ஸ்ரீ பஞ்சரத்தினம் பிள்ளை அவர்கள் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிது பூர்த்தி பெற்றது.

சித்தாந்தக் கட்டளை

[மலர் - 29; இதழ் - 8; 384-ம் பக்கத் தொடர்ச்சி]

அவத்தை

தத்துவங்களோடு ஆன்மா பொருந்திக் கன்மம் புசிக்கிறபோது கீழாலவத்தை-ரு, மத்தியாலவத்தை-ரு, சுத்தாவத்தை-ரு, காரணாவத்தை-ங ஆக கஅ அவத்தைகளைப் பெறுவன்.

கீழாலவத்தை :—[இது கேவலாவத்தையின் காரியம்.]

சாக்கிரம் :—தத்துவம் ௩௪-ல் ஞானேந்திரியம்-ரு, கன்மேந்திரியம்-ரு, தன்மாத்திரை-ரு, வசனாதி-ரு, வாயு-௧௦, புருடன்-௧, அந்தக்கரணம்-ச, ஆக ௩ரு கருவிகளுடன் ஆன்மா லலாடத்தானத்தில் நின்ற அவசரம்.

சொப்பனம் :—முன் சொன்னவற்றுள் ஞானேந்திரியம், கன்மேந்திரியம் நீங்கலாக மற்ற உடு கருவிகளுடன் ஆன்மா கண்டத்தில் நின்ற அவசரம்.

சுழுத்தி :—புருடன்-க, அந்தக்கரணம் நான்கில் சித்தம்-க, வாயு பத்தில் பிராணவாயு-க, ஆக மூன்று கருவிகளுடன் ஆன்மா இருதயத்தில் நின்ற அவசரம்.

துரியம் :—பிராணவாயுவும் புருடனுமாகிய இரண்டு கருவிகளுடன் ஆன்மா நாபித்தானத்து நின்ற அவசரம்.

துரியாதீதம் :—ஆன்மா புருடனோடு மூலாதாரத்தில் நின்ற அவசரம்.

மத்தியாவத்தை :—[இது சகலாவத்தையின் காரியம்.]

சாக்கிர துரியாதீதம் :—ஒரு பண்டத்தை மறந்தவன் அந்தப் பண்டங் காணுதபோது பிராணவாயுவு மியங்காமல் சிவதத்துவம் ஒன்றுடன் மூர்ச்சித்திருந்த அவசரம்.

சாக்கிர துரியம் :—அந்தப் பிராணவாயு இயங்கத் தக்கதாகப் பெருமூச்செறிந்து சிவதத்துவம், சத்திதத்துவங்களுடன் விசாரித்தறிவோ மென்ற அவசரம்.

சாக்கிர சுழுத்தி :—அவ்விடத்தி லல்லவோ போனுமென்று சிவம், சத்தி, சாதாக்கிய தத்துவங்களுடன் நினைவெழுந்த அவசரம்.

சாக்கிர சொப்பனம் :—இன்னவிடத்தில் பண்டம் வைத்தோமெனச் சிவம், சத்தி, சாதாக்கியம், ஈச்சுர தத்துவங்களோடு விசாரப்பட்ட அவசரம்.

சாக்கிர சாக்கிரம் :—அந்தப் பண்டம் வைத்தவிடத்திலே சென்று சுத்த தத்துவ மைந்துடன் கண்ட அவசரம்.

நின்மலாவத்தை :—[இது சுத்தாவத்தையின் காரியம்.]

நின்மல சாக்கிரம் :—ஆசாரியராலே ஞானதீட்சை பெற்றுத் திரிபதார்த்த வுண்மை அறிந்து சிந்தித்துத் தெளிந்து கருவிகள் நீங்க விசாரித்து நிற்பது.

நின்மல சொப்பனம் :—கருவிகள் நீங்கியும் நீங்காமலும் நடுவே சற்றுப் பதைப்புண்டாவது.

நின்மல சுழுத்தி :—தத்துவ நீங்கி மேலான கேவலந் தானாய் நிற்பது.

நின்மல துரியம் :—கேவல நீங்கி, அருளினாலே தன்னையுங் கண்டு, அருளையுங் கண்டு, அவ் வசத்தாய் நிற்பது.

நின்மல துரியாதீதம் :—சிவத்தைத் தரிசித்துச் சிவாநந்தத் தழுந்துதல்.

கேவலாவத்தை :—சர்வசங்கார காலத்து ஆன்மாக்கள் சுத்த மாயா காரணத்திலே யொடுங்கிச் சிருட்டி காலமளவும் ஆணவமலத்தான் மறைப்புண்டு, கலையாதி தத்துவங் களோடுங் கூடாமல் யாதொரு நினைவுமின்றி யிருப்பது. இது கண்ணுனது இரவின் இருளிலே யொளிகெடாமல் விழித்திருப்பது போலும்.

சகலாவத்தை :—சிருட்டி தொடங்கிச் சர்வசங்கார மளவும் ஆன்மாக்கள் தத்துவம் முப்பத்தாறேடு கூடி, எண்பத்து நூறாயிரம் யோனி பேதங்களிலும் பிறந்திறந் துழல்வது. இது இரவின் இருளி லழுந்திக் கிடந்த கண், விளக்கினலே இருள் நீங்கிப் பல பதார்த்தங்களைக் காண்டல் போலும்.

சுத்தாவத்தை :—ஆன்மாக்கள் கேவல சகலப்பட்டுப் பிறந்திறந்து திரியுமவசரத்து அவர்கட்கு இருவினையொப் பும், சத்திநிபாதமும், குருவருளும், ஞான சாதனமும், மும் மலக் கழிவும், வாதனை நீக்கமும், ஞானப் பெருக்கமு முறையே உண்டாகப் பெற்றுத் திருவருளைக் கூடுவது. இது இரவில் இருளோடும் விளக்கோடுங் கூடியிருந்த கண்ணுனது ஆதித்தனுதயஞ் செய்தவிடத்து அதன் கிரணத்தா லாதித்தனைக் காண்டல்போலும்.

மார்க்கங்கள்

சன்மார்க்கம், சக மார்க்கம், புத்திர மார்க்கம், தாச மார்க்கம் என நால்வகையாம். இவற்றை ஞானம், யோகம், கிரியை, சரியை யென்றுஞ் சொல்லுவர். இவற்றால் முறையே வரும் முத்திகள், சிவ சாயுச்சியம், சிவ சாரூபம், சிவ சாமீபம், சிவ சாலோகம் என்பனவாம்.

சன்மார்க்கம் :—வேதங்கள், சாத்திரங்கள், புராணங் கள், கலைஞானங்கள், சமய சாத்திரங்கள் இவை பலவும் கற்றுணர்ந்து, புறச் சமயங்களில் பலவாகச் சொல்லப்பட் டிருக்கிற யாவையும் பூர்வபட்சஞ் செய்து, மேலான பதி

பசு பாசமாகிய ஞானத்தால், ஞாதுரு ஞான ஞேயங்கள் பொருந்தாவண்ணம், பதியோடு இரண்டறக் கலக்கத்தக்க ஞானத்தைப் பெறுவது.

யோக மார்க்கம் :—பஞ்சேந்திரியங்களை யொடுக்கி, ரேசக பூரக வாயுக்களைத் தடுத்துக் கும்பித்திருந்து, பிராணவாயுவைச் சுழுமுனையி னிறுத்தி, தனது சரீரத்துள்ளே ஆறு தாரங்களை யறிந்து, அவற்றில் பத்மதளம், அதிதேவதை, அக்கரங்களாகிய பொருளை யறிந்து தியானித்து, மூலாதாரத்தில் அக்கினியைச் சொலிப்பித்து, நாபித்தானத்திற் குண்டலி சத்தி சொருபமா யிருக்கும் அமுதத்தை யுருகப் பண்ணி, மற்றை ஆதாரங்களில் அதோமுகமான பதுமங்களை அதனைக்கொண்டு பேதித்து, மேலே சென்று விந்துத்தானத்தின் வழியே யிறங்கிப் பெருகுகின்ற அமுததாரையைத் தனதுடல் முற்றும் நிறையச் செய்து, முழுச் சோதியான சிவத்தியானத்திருப்பது முதலியவாம்.

புத்திர மார்க்கம் :—அன்றெடுத்த மணமுள்ள புதிய மலர், தூபதீபங்கள், திருமஞ்சனம், திருவமுது முதலிய திரவியங்களைச் சேகரித்து, பூதசுத்தி முதலிய பஞ்ச சுத்திகளையுஞ் செய்து, ஆசனம் பூசித்து, அதன்மேல் வித்தியா தேகமாகிய மூர்த்தியைக் கற்பித்து, அதில் மூர்த்திமானாகிய சுத்தசிவத்தைத் தியானித்து ஆவாகித்து, சுத்தமான பத்தியினால் ஏகாக்கிர மனத்தோ டுபசரித்துப் பிரார்த்தித்துத் தோத்திரஞ் செய்து, விருப்பத்தோடு அக்கினிகாரிய மியற்றிவருதல் முதலியவாம்.

தாச மார்க்கம் :—சிவபெருமானது திருக்கோயிலில் திருவலகிடுதல், திருமெழுகிடுதல், மலர்கொய்தல், அம் மலர்களைத் தார் மாலை கண்ணி யென்னும் பகுப்பினவாகச் சமைத்தல், ஸ்ரீ கண்ட பரமேசுவரர் கல்யாணசுந்தரர் முதலிய குணங்களைப் புகழ்ந்து பாடுதல், திருவிளக்கிடுதல், திருநந்தவன முண்டுபண்ணுதல், சிவனடியார் திருவேடத்தைக் காணின் எதிர்சென்று, "ஏதேனும் அடியேனா லாக வேண்டிய பணி உளதோ?" என வினவி அவற்றைச் செய்தல் முதலியனவாம்.

நியமங்கள்

இடம் :—கங்கை, குமரி முதலிய புண்ணிய தீர்த்தங்களை யும் ; காசி, காஞ்சி, திருவம்பலம் முதலான சிவத் தானங் களையும் நாடியிருக்கை.

காலம் :—விஷம், அயனம், சங்கிரமம் முதலாயுள்ள காலங்களிலே செய்யுங் கிரமங்கள்.

திக்கு :—இன்ன மந்திரம் இன்ன திசையைப் பார்த்துச் செபிக்கலா மென்னு முறைமைகள்.

ஆசனம் :—பதுமாதனம், கூர்மாதன முதலாயுள்ள ஆதனங்களிட்டிருக்கை.

குலம் :—ஆதிசைவர் முதல் பஞ்சம ரீருகிய குலநீதி முதலாயுள்ளவை.

குணம் :—அவரவர் சீலத்தி லொழுகுதல், பிறரை நிந்தி யாமை, புறங்கூருமை முதலிய.

சீர் :—அந்தந்தச் சாதி ஒழுங்கு குலேயாமல் நடக்கை.

விரதம் :—கொல்லாவிரதம்,சிவராத்திரி விரதம் முதலிய.

சீலம் :—சாதித் தொழில், குணத் தொழில், பொறை யுடைமை, அருளுடைமை முதலிய.

தவம் :—பஞ்சாக்கினிநடு, சலத்தின் நடுவில் செய்யுந் தவங்கள்.

செபம் :—தேவதை மந்திரங்கள், சத்தி மந்திரங்கள் முதலிய.

தியானம் :—ஆதாரம், நிராதார முதலிய தியானங்கள்.

பஞ்சாக்கர வுண்மை

சிவபெருமானுடைய திருநாமமாகிய நமச்சிவாய என்ற ஐந்தட்சரங்களில் நகாரத்தில் திரோதசத்தியும், மகாரத்தில் மலமும், சிகாரத்திற் சிவமும், வகாரத்தில் அருளும், யகா ரத்தில் ஆன்மாவும் நிற்கும். இவ்வைந்தும் பதி, பசு, பாசம் மூன்றி லடங்கும். எங்ஙனமெனின் : சிவ்வும், வவ்வும், நவ் வும் பதியின் கூருகிய சிவத்திலும், அருளிலும், திரோதசத்தி யிலு மடங்கும். யகரம் பசுவி லடங்கும். மகரம் பாசத்தி லடங்கும். அஞ்ஞானமாகிய மலமும், அதனோடு கூடி யிருக்கப்பட்ட திரோதானசத்தியும் ஆன்மாவைப் பொருந் தாம னீங்கும்படி சிவ முன்னுக வுச்சரித்தால் திரோத மொருபாலும், அருளும் சிவமு மொருபாலும், முன்பின்

சூழ்ந்துநிற்க நடுநின்றது ஆன்மா. அப்போது நவ்வாகிய திரோத சத்தியும் மவ்வாகிய மலத்தின் மேலீட்டையும் நீக்கி அருளாகநின்று பிரகாசிக்கும். மலத்தினின்று மீள விட்ட வவ்வாகிய அருள் சிவ்வாகிய சிவத்தையும் தாரா நிற்கும். பின்பு மலபாகம் வந்த யவ்வாகிய ஆன்மா வகார மாகிய அருள் தாரகமாகச் சென்று அந்தச் சிகாரமாகிய சிவத்தோடுங் கூடி இரண்டறநின் றனுபவிக்கும்.

பஞ்சசுத்தி

பூத சுத்தி :—முப்பத்தாறு தத்துவங்கள் நாமல்ல, அவை யாவுஞ் சடம், அவையுந் தானாகக் காரியப்படமாட்டவென அறிகை.

ஆன்ம சுத்தி :—அப்படி யறிவது திருவருளாலன்றி ஆன்மபோதத்தா லல்லவென அறிகை.

திரவிய சுத்தி :—ஆன்மபோதத்தாற்றானே யறிகைக்குச் சேட்டை யில்லையென்று கண்டதுகொண்டே ஆன்மாவுக்கு அறிவில்லை யென அறிந்து, கண்டு கேட் டுண் டுயிர்த் துற்றறிவதெல்லாந் திருவருளென அறிகை.

மந்திர சுத்தி :—ஐந்தெழுத்தைச் சிகாரமுதலாக மாறி அதன் உண்மையை விசாரித்தறிகை.

இலிங்க சுத்தி :—பதி யெங்கும் பூரணமாய்ப் பசு பாசங் களிரண்டினும் பிரிவறநின்று அவற்றைச் சேட்டிப்பித்து நின்ற தன்மையை யறிந்து, அத்தகைய சிவம் இலிங்கத்தினு மெழுந்தருளி யிருக்குமென அறிகை.

சத்திநிபாதம்

மந்தம் :—நமக்குப் பேருபுள்ள வொரு பதி யுண்டென் றறிவெழுந்திருக்கை. அது வாழைத் தண்டிலே நெருப்புப் பற்றினாற்போலும்.

மந்ததரம் :—அப் பதியை யடைவதற்கு வழி யெப்படி யென் றாராய்கை. அது பச்சை விறகிலே நெருப்புப் பற்றி னாற்போலும்.

தீவிரம் :—அப்படி யாராய்ந்தறிந்த பதியை யடைவதற் குப் பிரபஞ்சத்தை வெறுத்துப் புளியம்பழமும் அதனோடும் போல் நிற்றல். அது உலர்ந்த விறகிலே நெருப்புப் பற்றினாற் போலும்.

தீவிரதரம் :—பிரபஞ்சத்தை முற்றத் துறந்து, ஆசாரியனே பொருளெனக் கண்டு வழிபடுகை. அது கரியிலே நெருப்புப் பற்றினாற்போலும்.

தீட்சைகள்

ஆசாரியன் பாச விமோசனம் பண்ணும்படி ஆன்மாக்களுக்குச் செய்யும் தீட்சைகள் சாதிபேத முதலியவற்றால் பலவிதமாம். அவை வருமாறு :—

நயன தீட்சை :—மீன் தனது சினையைக் கண்ணால் பார்த்த மாத்திரத்தால் இரட்சிப்பதுபோல, ஆசாரியன் நயனத்தால் கடாட்சித் தனுக்கிரகிப்பது.

பரிச தீட்சை :—கோழியானது தனது சினையைச் சிறகாற் றழுவிக் காத்தல்போலத் தனது கரத்தால்தொட் டனுக்கிரகிப்பது.

மானச தீட்சை :—ஆமையானது தனது சினையை நினைத்தன் மாத்திரத்தா லிரட்சிப்பதுபோ லனுக்கிரகிப்பது.

வாசக தீட்சை :—பஞ்சாட்சரோபதேசத்தா லனுக்கிரகிப்பது.

சாத்திர தீட்சை :—ஆகமார்த்தங்களைப் போதிப்பது.

யோக தீட்சை :—யோக மார்க்கத்தால் சீடனது இருதயத்திற் சென்றனுக்கிரகிப்பது.

அவுத்திரி தீட்சை :—ஓம சம்பந்த முற்றது. இது ஞான தீட்சை என்றும், கிரியாதீட்சை என்றும் இரண்டுவிதமாம்.

ஞான தீட்சை :—மனத்தாற் செய்யப்படுவது.

கிரியா தீட்சை :—குண்டல மண்டலாதிகளிட்டுச் செய்வது. இது நிர்ப்பீஜமென்றும், சபீஜமென்றும் இரண்டு வகையாம்.

நிர்ப்பீஜம் :—இது சத்திய நிர்வாணமென்றும், அசத்திய நிர்வாணமென்றும் இரண்டாம்.

சத்திய நிர்வாணம் :—விருத்தர் முதலிய பக்குவர்க்குச் செய்வது.

அசத்திய நிர்வாணம் :—அறிவிலிகளாகிய வாலிபர் முதலியவர்க்குச் செய்வது.

சபீச தீட்சை :—ஆசாரியனிடத்து ஆகமங்களை யோதி, பதி பசு பாச உண்மைகளை யறிந்து, சமயாசாரங்களில் வழுவாத நன்மையுடையவர்கட்குச் செய்வது. இது உலோகதர்மிணி யென்றும், சிவதர்மிணி யென்றும் இரண்டாம்.

உலோக தர்மிணி :—ஆசாரியன் சீடனைப் பதப்பிராப்தி யாகிய புவனங்களில் சேர்க்கும் தீட்சை.

சிவதர்மிணி :—மோட்சகாமியாகிய சீடனுக்குச் சிகாச் சேதஞ் செய்து மோட்சத்தை யடைவிக்கும் தீட்சை. சமய-விசேட-நிர்வாண தீட்சைகளும், ஆசாரிய அபிடேகமும், சபீச தீட்சையிலும் அதனுட்பிரிவுகளிலுமடங்கும்.

*தசகாரியம்

தத்துவரூபமாவது :—முப்பத்தாறு தத்துவங்களுடைய தொழிலைத் தனக்கு வேறா யறிதல்.

தத்துவ தரிசனமாவது :—தத்துவங்களைச் சடமென் றறிதல்.

தத்துவ சுத்தியாவது :—அவைகளைச் சிவஞானத்தினாலே தனக்கு அன்னியமென் றறிதல்.

ஆத்ம ரூபமாவது :—பஞ்ச மலங்களும் நீங்கி ஆத்ம ஞான மென்னும் அறிவே வடிவென அறிதல்.

ஆத்ம தரிசனமாவது :—தனக்கொரு செய்தியு மில்லை யென் றறிந்து நிற்றல்.

ஆத்ம சுத்தியாவது :—பெத்தத்தினும் முத்தியினுஞ் சிவ னுபகரிக்கிறாரென்று தன்னுடைய சுதந்தர ஆனியை யறிந்து சிவஞானத்திலே யழுந்தல்.

சிவரூபமாவது :—ஆணவமலத்திலே கிடக்கிற ஆன்மா வைச் சிவன் பஞ்சகிருத்தியங்களைச் செய்து மலங்களை நீக்கி மோட்சத்திலே விடுவனென்று திடமா யறிதல்.

சிவதரிசனமாவது :—சிவன் செய்யும் பஞ்ச கிருத்தி யத்தை ஆன்மா செய்யானென் றறிந்து ஆன்மாவைத் தரிசிப்பித்து நின்ற ஞானம்.

சிவயோகமாவது :—சிவசத்தி செய்யுங் கிருத்திய மெல் லாம் சிவனுக்குச் சற்று மில்லையென் றறிந்து, சிவசத்தியை யன்றித் தனக்கும் பிறருக்குஞ் சற்றுஞ் செய்தி யில்லை யென்று தெரிந்து திருவருளோ டழுந்தல்.

சிவபோகமாவது :—சிவத்தோ டிரண்டறநின்று சிவா னந்தத்தைப் புசித்துவருதல்.

---

*இவற்றின் விரிவைச் சித்தாந்த தசகாரியக் கட்டளையிற் காண்க.

பிரிவாற்ருமை

சைவச் சான்ரேூர், தமிழறிஞர்,
சாமி வேலா யுதம்பிள்ளை,
உய்வைத் தரும்நல் திருக்குறட்சொல்
அடைவொன் றுவந்து தொகுத்தளித்தோர் !
மெய்மைக் குயர்ந்த ஆராய்ச்சி
மேலும் நடாத்த வாய்ப்புற்றும்,
நைவைத் தந்து, நாம்இரங்க,
நலமே இறைதாள் நண்ணுற்ருர் ! 1

'புலவர் ஏறு', முதுகிழவர்,
புகழ்பூத் தொளிர்ந்த 'ஆசிரியர்',
நலவர், வரத நஞ்சைய
பிள்ளை அவர்கள், நறுங்கவிதை
வலவர், சைவ சித்தாந்த
மாண்பே ரறிஞர், பழம்புலவர்
தலைவர், சாமஜத் தொடர்புடையார்
தாமும், முன்னர்ச் சிவம்சார்ந்தார் ! 2

இருவர் பெரியோர் இவர்கள்தாம்,
இனிய சைவத் தமிழ்நலங்கள்
மருவ வாழ்ந்து, தக்காங்கு
வாழ்க்கை முழுதும் பணிபுரிந்தோர் !
ஒருவர் பின்னர் ஒருவராய்,
உயர்ந்தோர் பலரும் மறைகின்ருர் !
திருவில் சிறியோம், இனி,இவர்போற்
சிறந்தோர் தம்மைக் காண்போமோ ? 3

—புலவர் முருகவேள், பி.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

பொன்விழா மலர்

மிக மிகக் கவர்ச்சியான வெளியீடு. இதில் ஐம்பத்தொரு கட்டுரைகள் உள்ளன. சமாஜத்தின் ஐம்பது ஆண்டுகளின் நிகழ்ச்சிகள் தெளிவாக எழுதப் பெற்றுள்ளன. ஐம்பதாண்டுகளில் நடந்த நிறைவு விழாக்களின் தலைவர்கள் ; நடைபெற்ற இடங்கள்; மங்கையர் மாநாடு, இளைஞர் மாநாட்டு விவரங்கள் ; சமாஜத் தொண்டர்கள் தொண்ணூற்றொருவர் பற்றிய குறிப்புக்கள் ; உயர்திருவாளர்கள்: ஞானியார் சுவாமிகள், மறைமலையடிகள், ஜே.எம். நல்லசாமிப்பிள்ளை, ஸர்.பொன்னம்பலம்இராமநாதன், பொன்விழாத்தலைவர் கனம் சு. நடேசப்பிள்ளை, திரு.வி.க. முதலிய முப்பதின்மர் உருவப்படங்கள் ; வேறு பற்பல சிறப்புக்கள் இதில் மிளிர்கின்றன. கட்டுரையாளர்களுள் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், டாக்டர் வ. ஆ. தேவசேனபதி, தணிகைமணி ராவ்பகதூர் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை, சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார், சித்தாந்த சிகாமணி க. வச்சிரவேல் முதலியார், சித்தாந்த ரத்னகரம் முத்து சு. மாணிக்கவாசக முதலியார், திரு. அ. மு. பரமசிவாநந்தம் முதலியோர் உள்ளனர். இருநூற்று நாற்பது பக்கங் கொண்ட அழகிய பதிப்பு.

விலை ரூபா ஒன்று. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா பன்னிரண்டு. உடனே முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்க. வி. பி. மூலம் அனுப்பப்படமாட்டாது.

கிடைக்கும் இடம் :

பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை–1.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi. Edited by C M Ramachandran Chettiar, B.A., B.L., and Published by S.Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 2, Seetha Rama Nagar, Cuddalore N. T.